

பத்ரி நாராயணன்—மூலஸ்தானம்

ஓம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

வதரியாச்சிரமம் என்னும்

பத்ரிகாஸ்ரமம்

யாத்ரா மார்க்கம்

(மார்க்க வசதிகளின் விவரங்கள் அடங்கியது)

இது விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் சம்மந்தமாகிய
"108 திவ்ய தேசயாத்ரா ப்ரபாவ சந்திரோதயம்"
என்னும் கிரந்தத்தின் ஆசிரியரான

பெங்களூர் வக்கீல்
ஜி. கெ. (105) பலிஜ என்பவரால்
எழுதப்பட்டது.

 [விலை அணா 4.

பெங்களூர்
சுரேசா அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.



ஆசிரியர்.

முகவுரை.

இந்தியாவின் ஐக்ய மஹானமெனப்படும் யுனைடெட் ப்ராவின்ஸஸ்ஷின் (U.P.) கார்வால் டிஸ்ட்ரிக்ட் (Garhwal Dist.) என்பது ஹிமயகிரி மலைச்சாரலிலிருந்தாலும் மலையின் மீதுள்ள 3 வைஷ்ண திவ்ய தேசங்களாகிய (1) பெரியாழ்வார் மங்களாசாசமான திருக்கண்டங்கடிநகர் அல்லது கண்டமென்னும் கடிநகர் இப்பொழுது தேவப்பிரயாகை யெனப்படுவது (2) திருமங்கையாழ்வார் மங்களாசாசனமான திருப்பிரிதி அல்லது ஜோஷிமடம் (3) மேல்சொன்ன இரண்டு ஆழ்வார்களும் மங்களாசாசனமாகப் பெற்ற பத்ரிகாஸ்ரம மென்னும் பத்ரி நாராயணன் என்னும் ஸ்தலமும் இந்த டிஸ்க்ரிக்ட் எல்லைக்குள் அடங்கியவை. மேல்கண்ட 1, 2, திவ்ய தேசங்களை வழியில் சேவித்துக் கொண்டு மூன்றவதான பிஷால் பத்ரி என்னும் பத்ரிகாஸ்ரமம் யாத்திரை செல்லவேண்டும். ரிஷிகேஸிலிருந்து தேவப்பிரயாகை 44 மைல்கள். ஹரித்வாரத்திலிருந்து 58 மைல்களாகின்றது. ஜோஷிமட மென்னும் திருப்பிரிதி ரிஷிகேசத்திலிருந்து 150 மைல்-அதாவது பத்ரீகாஸ்ரமத்திற்கு 19-வது மைலிலிருக்கிறது. இந்த இடங்களுக்குப் போக ரயில், மோடார், குதிரை, கட்டை வண்டிகளின் வசதியே கிடையாது. நடந்தோ அல்லது டோலிகளிலோ செல்ல வேண்டுமானுலும் வருஷா வருஷம் சுமார் 50,000 யாத்ரீகர்களுக்குக்குறைவில்லாமல் பத்ரீகாஸ்ரமத்திற்கு தரிசனர்தமாகச் செல்லுகிறுர்கள்.

இந்த யாத்ரீகர்களில் பெரும்பாண்மையோர் பஞ்சாப் (Punjab), வங்காளம் (Bengal), மற்றும் ஹிந்துஸ்தான் (Hindustan) தேசத்தவர்களே யாவர். மஹாராஷ்டிரத்தி

விருந்து வெகு சிலரே இந்த யாத்திரைக்குச் செல்லுகிறார்கள். ஆனால் சென்னை ராஜதானியிலிருந்து (Madras Presidency) செல்லும் யாத்ரீகர்கள் வெகுக்குறைவு. அவர்களிலும் தெலுங்கு நாட்டார், தமிழ் தேசத்தவர்களைவிட, அதிகமானவர்கள் வருகிறார்கள். மொத்தத்தில் தமிழ் தேசத்தவர்கள் பத்ரீ யாத்திரை செல்வது வெகுக்குறைவு. காரணம் அடியேனுக்குத் தெரிந்தமட்டும் கீழ்கண்டவைகள். இவர்கள் பத்ரிகாஸ்ரமத்திற்கு நேர் எதிராய் தென் கோடியில் வெகு தூரத்தில் வசிக்கிறவர்கள்—ஹிந்தி பாஷை யறியாதவர்கள். தென்னாட்டு சாப்பாடாகிய அரிசி, காரம், உப்பு, புளிப்பு இல்லாமல் கோதுமை ரொட்டி சமைத்த பருப்பு மாத்திரம் சாப்பிட்டு திருப்தி யடையாதவர்கள். மேலும் மார்க்க வசதிகளும் பிரயாணத்தின் மற்ற விவரங்களும் தெரியாதவர்கள். அவ்விடம் சென்ற சிலர் திரும்பிவந்து காயலாவில் சில சமயம் விழுந்துவிடுகிறதைப் பார்த்து பயந்து இம்மாதிரியான கஷ்ட யாத்திரை செய்வதைவிட உள்ளூரிலேயே சுகமாயிருந்து பகவத்யானம் செய்து கொள்ளலாமென திருப்தி கொண்டவர்களாய்ச் சிலரும், பணச்சிலவு வெகுவாகுமே என பயந்து சிலரும், யாத்திரை செய்ய சக்தியுள்ளவர்களாய் இருந்தாலும், தைரியமாய் இந்த யாத்திரை செய்வதில்லை—இப்பொழுது சில வருஷங்களாய் சிலர் ஷை யாத்திரை போவதாலும், அடியேன் சந்தித்த சிலருக்கு யாத்திரை செய்யவேண்டுமான உபகரணங்கள் யாவையென்று தெரியாததால் யாத்திரை செய்யவில்லையென்று அடியேனுக்குத் தெரிந்ததால், இந்நூல் யாத்ரீகர்களுக்கு உபயோகப்படுமாறு வெளியிடப்படுகிறது.

இது அடியேன் இப்பொழுது தயாரித்து வரும் "108 திவ்ய தேச யாத்ரா ப்ரபாவ சந்திரோதயம்" என்னும் நூலில்

102வது திவ்ய தேசமாய் எழுதியுள்ள 12 வடநாட்டு திவ்ய தேசங்களில் ஒன்ருகிய பத்ரிகாஸ்ரமமென்னும் திவ்ய தேசத்தின் விசேஷக் குறிப்பை ஒரு தனிப்பிரதியாய் பத்ரீ யாத்திரை சமீபிக்கிறதினுல் வெளியிடுகிறேன். இத்துடன் விட்டுப்போகாமல் தரிசிக்கக்கூடும் 100-101வது திவ்ய தேசங்களையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த க்ரந்தம் யாத்திரை செய்ய உத்தேசிப்பவர்களுக்கு வெகு உபயோகமுள்ளதாகும்—அடியேன் யாத்திரை செய்த அநுபவத்தை இதில் விவாமாய்க்காட்டியிருக்கிறேன். சீக்கிரத்தில் வெளியாகும் அடியேன் கிரந்தத்தில் திவ்ய தேசங்களின் போட்டோ படங்கள் கூடிய வரையில் சேர்க்கப்படும். 12 ஆழ்வார்களின் வைபவச்சுருக்கங்களும், அவர்களருளிச்செய்த ப்ரபந்தங்களின் விவாங்கள், மங்களாசாசன பாசுராங்களின் விவாங்களும் குறிப்பிடப்படும். மற்றும் 108 திவ்ய தேசங்களின் யாத்ரா மார்க்கமும் வசதிகளும் அடங்கியுள்ளது.

ஜி. கெ. (105) பலிஜ,
வக்கீல், பத்ரீவில்லா.

களாஸ்பாளையம் மெயின் ரோட்,
பெங்களூர் சிடி. 16—3—35.

100. திருக்கண்டங்கடிநகர் (தேவப்ரயாகை) (Devaprayag) அல்லது கண்டமென்னும்கடிநகர்

மங்களாசாசனம்


பெரியாழ்வாரருளிச் செய்த பெரியாழ்வார் திருமொழி
4ம் பத்து 7ம் திருமொழி 11 பாசுரங்கள்

ப்ரபாவம் :—நீலமேகப் பெருமான், புருஷோத்தமன், புண்டரீகவல்லி, மங்களவிமானம், மங்கள தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பாரத்வாஜ மகரிஷிக்குப் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதியும்:-இது ஹரித்துவாரத்திலிருந்து பத்ரீநாராயணன் போகும் வழியில் மலைமேல் 58வது மைலிலுள்ள சிறிய கிராமம். இதுவே 5 பிரயாகுகளில் (நதிகளின் சங்கங்களில்) முதலான பிரயாக் (சங்கமம்). மற்ற நான்கு பிரயாகுகள் **பத்ரீ** செல்லும் வழியிலுள்ளவை. (பிரயாக் என்றால் இரண்டு நதிகள் சந்திக்குமிடம்).

1. இவ்விடம் அலக்நந்தா கங்கையில் பாகீரதி கங்கை சங்கமமாகிறது. இவ்விடமிருந்து யாத்ரீகர்கள் பாகீரதி கங்கைக் கரையின் மூலியமாய் யமுனாத்திரி, (யமுனா உற்பத்தி) கங்கோத்ரி (கங்கை உற்பத்தி) என்னுமிடங்களுக்கு தீர்த்த யாத்திரை செய்யப் பிரியவேண்டும்.

2. ருத்திரபிரயாக் (Rudraprayag)—இது ஹரித்துவாரத்திலிருந்து $95\frac{1}{2}$ மைல். தேவப்பிரயாகையிலிருந்து $37\frac{1}{2}$ மைல். அவ்விடம் அலக்நந்தா கங்கையில் மந்தாக்கினி கங்கை சங்கமமாகிறது. மந்தாக்கினி கங்கையின் கரை மார்க்கமாய்



தேவப்பிரயாக் என்னும் திருக்கண்டங் கடிநகர்

அல்லது கண்டமென்னும் கடிநகர்—(Devaprayag)

கேதார் நாத் தரிசனம் செய்யச் செல்லும் யாத்ரீகர்கள் பிரிகிருர்கள்.

3. கர்ணபிரயாக் (Karnaprayag)—இது ஹரித்வாரத்திலிருந்து 116வது மைலிலுள்ளது. இவ்விடம் அலக்நந்தா கங்கையும் பிண்டார் கங்கை யென்னும் நதியும் சங்கமம். இவ்விடத்தில் ராமநகர்—ராணிகேட்டிலிருந்து வரும் வழி சந்திக்கிறது.

4. நந்தபிரயாக் (Nandaprayag)—இது கர்ண பிரயாகிலிருந்து 12½ மைல் தூரம். இவ்விடம் அலக்நந்தா கங்கையும் நந்தாகினி கங்கையும் சங்கமம்.

5. விஷ்ணுபிரயாக் (Vishnuprayag)—இது ஜோஷிமடத்திலிருந்து பத்ரீ போகும் வழியில் 2 மைல் தூரத்திலுள்ளது. இவ்விடம் அலக்நந்தாவும் விஷ்ணு கங்கையும் சங்கமம்.

இந்த தேவப்பிரயாகை என்னும் ஸ்தலத்தின் பூர்ணமான விவரம் வதரியாச்சிரமம் அல்லது பத்ரிகாஸ்ரமம் என்னும் ஸ்தலத்தின் விவரத்தில் காண்க. இவ்விடமுள்ள விஷ்ணு சன்னதியில் இவ்விடம் வசிக்கும் தென்னுட்டு பிராமணர் தான் பூஜை செய்கிருர். சன்னதியும் சங்கமத்தின் சமீபமாயுள்ளது. கடைகளும் சத்திரங்களுமுண்டு.


101. திருப்பிரிதி (ஜோஷிமடம்) Joshimutt

மங்களாசாஸனம்

திருமங்கையாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழி
1ம் பத்து 2ம் திருமொழி 10 பாசுரங்கள்

ப்ரபாவம்:— பரம புருஷன், பரிமளவல்லி நாச்சியார், கோவர்த்தன விமானம், இந்திர தீர்த்தம், மாநஸ ஸரஸ்ஸு, கிழக்கே திருமுக மண்டலம், புஜங்க சயனம், பார்வதிக்குப் ப்ரத்யக்ஷம்.

மார்க்கமும் வசதியும்:—இந்த ஸ்தலத்திற்கு இப்போது ஜோஷி மடமென்கிறார்கள்—இது ஹரித்வாரத்திலிருந்து 164 மைல் தூரமுள்ளது. இவ்விடமிருந்து வதரியாச்ரமம் என்கிற பத்ரீ நாராயணன் 19 மைல் தூரம். இவ்விடம் சத்திரங்களும் கடைகளுமுண்டு—மேலே சொல்லியிருக்கும் வதரியாச்ரமம் அல்லது பத்ரிகாஸ்ரமம் என்னும் ஸ்தலத்தின் விவரத்தில் இந்த ஸ்தலத்தின் பூர்ண விஷயங்களை அறியவும். ப்ரபாவத்தில் கண்டிருக்கும் சன்னதி வெகுவாய் காணப் படுவதில்லை. அவ்விடம் விசாரிக்கவேண்டும். சங்கரமடத்திலிருக்கும் நரசிம்ம சாலக்கிராமத்தை தான் யாத்ரீகர்கள் வெகுவாய் தரிசிக்கிறார்கள்.



திருப்பிரிதி அல்லது ஜோஷிமடம்—(Joshimutt)

102. வதரியாச்சிரமம் அல்லது பதரிகாஸ்ரமம்

(பத்ரீ நாராயணன் என்றும் பிஷால்பத்ரீ என்றும் சொல்லுவார்கள்)

மங்களாசாசனம்

பெரியாழ்வாருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி
4ம் பத்து 7ம் திருமொழி 9ம் பாசுரம்

திருமங்கையாழ்வாருளிச் செய்த பெரிய திருமொழி
1ம் பத்து 3ம் திருமொழி 10 பாசுரங்கள்
,, 4 ,, 10 ,,
சிறிய திருமடல் 74ம் பாசுரம்.

ப்ரபாவம்:—பத்ரி நாராயணன், அரவிந்தவல்லி, தப்த காஞ்சநவிமாநம், தப்த குண்டதீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், இலந்தை மரத்தின்கீழ் பத்மாஸநஞகி ஞானமுத்திரை தரித்து ஜலசீலரான தபஸ்வியாய் நாஞுக்குமந்திரோபதேசஞ் செய்தவர்.

இந்த ஸ்தலம் ஹிமயகிரி பர்வதத்தில் சமுத்திர மட்டத்தைவிட 23,210 அடி உயரமுள்ளது. அல்க்நந்தா என்னும் கங்கையின் வலதுபுறமாயுள்ளது. சுமார் 40, 50 வீடுகளுக்கு அதிகப்படாத கிராமம். தர்மசாலைகளும் ராமாநுஜ கூடமிருக்கின்றன. உற்சவ காலத்தில் மிட்டாய் கடைகளும் மற்ற சாப்பாட்டு சாமான்கள் கடைகளுமிருக்கின்றன. யாத்திரை காலத்தில் இவ்விடம் தபால், தந்தி ஆபீசுகளும், ஆஸ்பத்திரிகளுமுண்டு. சித்திரா பௌர்ணமி முதல் கொண்டு அற்பிசி மாதம் பௌர்ணமி வரையில் தான் இந்த சன்னதி திறந்திருக்கும். அதற்குமேல் சன்னதி சாற்றப்பட்டு ஊர் ஜனங்கள் எல்லோரும்

ஆடு மாடுகளுடன் 10 மைல் கீழேயுள்ள சேஷத்தாரா என்னு மிடத்திற்கும், 19 மைல் கீழேயுள்ள ஜோஷி மடத்திற்கும் மற்றைய மலையின்கீழ் கிராமங்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களினுல், போகாதவர்கள் துரத்தப்பட்டு, கிராமம் காலியாய் வீடுகளெல்லாம் பனிக்கட்டிகளால் மூடிப்போய் விடும். அவ்வூரில் கோவில் பூஜை செய்பவர் மலையாள தேசத்திய ஸ்மார்த்த நம்பூதரி பிராமணர் தான். இவரை ராவல் என்று கூப்பிடப்படுகிறது. இவர் ஆதிசங்கராசாரியாரின் சந்ததியாவர். ஜோஷிமடம் என்னுமிடத்தில் ஆதிசங்கரர் ஏற்படுத்திய சங்கரமடமிருக்கிறது. ஆதி சங்கரர் தான் பௌத்தர்களைவென்று அத்வைதமதத்தை நிலை நிறுத்தும் பொழுது நான்கு திசைகளிலும் 4 மடங்கள் ஏற்படுத்தினர். அவைகளில் மேற்குத் திசையிலிருப்பது துவாரகை மடம். இது துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணர் கோவிலுக்குள்ளேயே இருக்கிறது. கோவிலும் இந்த சங்கர மடத்தைச் சேர்ந்தது. வடதிசையிலிருப்பது ஜோஷிமடம். பத்ரீ நாராயணன் தேவஸ்தானமும் இவ்விடத்திலிருந்து கீழே 50 மைல் தூரம் வரையிலுமுள்ள கிராமங்கள், ஜமீன்கள்யாவும் இம்மடத்திற்குச்சொந்தமானவைகள். இம்மடத்தின் மஹந்து தான் ராவல் என்னும் இக்கோவிலின் பூஜாரி. கீழ்த்திசையில் சங்கரமடம் ஜகன்நாதத்திலிருக்கிறது. ஜகன்னுத கிருஷ்ணர் கோவில் இம்மடக்திற்குச் சேர்ந்தது. தென் திசையில் ஸ்ரீங்கேரி மடம்—இந்த நான்கு மடங்கள் தான் ஆதி சங்கருடைய மடங்களென்று அவர் சரமஸ்லோகத்தில் சொல்பட்டிருக்கிறது. புத்தகயாவிலுள்ள மடம் இவைகளுக்கு முன்பு ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டு பின்னைய காலத்தில் தனக்கு ஏற்பட்ட நான்கு சிஷ்யர்களையும் மேற்சொன்ன நான்குமடங்களுக்கு மடாதிபதிகளாய்நியமித்து

பின்னர் தான் பத்ரீ நாராயணன் சென்று மறைந்ததாகச் சொல்லப்படுகிறது.

பின் காலத்தில் அத்வைத சித்தாந்தம் பரவச்செய்யு மாறு சங்கருடைய சிஷ்யவர்கங்கள் தங்கள் முயற்சியால் தாங்களே சில மடங்களை ஏற்படுத்தி அவைகளுக்குத் தாங் களே மடாதிபதிகளாய்ச் சங்கரமடமென்று பெயர் வைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அம்மாதிரியான மடங்களே கும்ப கோணம் காமகோடி பீடமும், பம்பாய் மாகானத்திலுள்ள சதாரா சங்கரமடமும்.

அலக்நந்தா வென்னும் கங்கை பத்ரீ நாராயணன் எனப் படும் இடத்திற்கு மேல் 10 நாள் பிரயாணமுள்ள ஸ்தலத்தில் ஹிமயகிரி பர்வதத்தின் பனிக்கட்டிகள் கறைவதினலுண்டா கும் பிரவாகத்தின் நதி. இவ்விடம் செல்லமுடியாது. ஜனங் கள் சுலபமாய்ச் செல்லும்படியான இடம் இது வரையிலும் தான். இவ்விடத்தில் ஆதி சங்கரர், இப்பொழுது கற்பக் கிரகத்திலிருக்கும் யோக நாராயணனென்னும் கற்சிலையை ஸ்தாபித்ததாகவும், பத்மாசனமாயிருப்பதால் இதை பௌத்தா காரமென்று சங்கருக்குப்பின்னிட்டு, ஜனங்கள் இந்த சிலையை எடுத்து பக்கத்திலோடும் அலக்நந்தாவென்னும் கங்கையில் எறிந்து விட்டதாகவும், பின்னர் பாஷ்யகாரரென்ற இராமானு ஜர் இந்த சிலையை எடுத்து இப்பொழுதிருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவ்விடம் விஷ்ணு தப்த (உஷ்ண) ரூபி யென்று சொல்லப்படும். இவ்விடம் வசிப்பவர்கள் யாரொன்றல் வேளாண்மை செய்பவர்களல்ல. கோவிலில் பூஜை வகைரூக் களுக்குச் சகாயம் செய்யும் பிராமணர்கள் மற்றும் அவர்கள்

குடும்பத்தாரும், யாத்ரீகர்களால் ஜீவனம் செய்யும் பண்டாக்கள் என்று சொல்லப்படும் பிராமணர்களும் அவர்கள் குடும்பத்தாரும், வியாபாரார்த்தமாய் வந்து கடைகள் வைத்துக் கொண்டிருக்கும் வைஷியர்களும் அவர்கள் குடும்பத்தாரும், யாத்ரீகர்களும், மற்ற பிச்சையெடுப்போரும், சாதுக்களென்று சொல்லப்படும் உயர்தர பிச்சைக்காரருமே இவ்வூரின் பிரஜைகளாவர். யாத்திரை காலத்தில் இவ்விடம் ஓர் போலீஸ் ஸ்டேஷன் டெம்பரவரியாய் வைக்கப்படுகிறது. ஸ்பெஷல் டூட்டியாய் சில போலீஸ்காரர்களும் ஒரு சப் இன்ஸ்பெக்டரு மிருக்கிறார்.

இவ்வூரிலுள்ள சில பண்டாக்கள் இந்த ஸ்தல புராணம் கீழ்கண்டவாறு சொல்லுகிறார்கள். எப்படியென்றால், ஆதியில் விஷ்ணுவானவர் பூலோகத்தில் தன் லீலைகளையெல்லாம் லௌகீகமாய் ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களுக்கு தன்னிடத்தில் சாதாரண பக்தியும், நம்பிக்கையும் உண்டாகும்படியாய்ச் செய்து அதனால் அவர்களில் சிலர் பூலோக இன்ப சுகங்களைக் கோரியும், சிலர் அழியும் செல்வம் அதிகாரங்களைக் கோரியும், மற்றும் சிலர் மோக்ஷத்தையடைய வேண்டுமென்னும் ஆசையை யடைந்தும், இப்படி பலவாறு இந்த ஆத்மாக்களுக்கு உண்டாகும் அல்ப சுக துக்கம் முதலானதுகளைக் கண்டு கடவுள் வெகுவும் வருந்தி இந்த அசித்தானதுகளைத்தள்ளி மேலான பரமாத்வாவின் ஞானமும் பக்தியும் ஆத்ம கோடிகள் உஜ்ஜீவித்து மேலான பதவி அடையும் வண்ணம் செய்யவேண்டுமென்று **ஸ்ரீ பகவத்கீதை** என்னும் மகாரஹஸ்யமான **உபநிஷத்தான** ஆத்ம ஞானத்தையுண்டாக்கும் தத்வங்களை லோகத்தார் அறியும் வண்ணம் உபதேசித்தும், பின்னர் இந்த உபதேசமும்

லௌகீகமாய்க் காண்கின்றமையால் ஸ்ரீமஹா விஷ்ணு லோகத்தில் சகல ஜனங்களும் ஆத்ம ஞானத்தையடைந்து உஜ்ஜீவிக்குமாறு, தான் தபஸ்வியாய் பத்மாசனத்தில் யோக நிஷ்டையிலமர்ந்தபோது ஸ்ரீ லக்ஷ்மி பிராட்டியார் யோக நிஷ்டையிலிருக்கும் தன் பர்த்தாவுக்கு செய்யும் கைங்கர்யங்கள் எங்ஙனமெனத்தெளிந்து தான் ஒரு பத்ரீ (இளந்தை) விருக்ஷமாய் அவர் பக்கத்தில் தோன்றி நிழல் கொடுத்துக்கொண்டிருக்க அப்பொழுது ஸ்ரீமந் நாராயணன் நரனுக்கு, அதாவது உலகத்தோருக்கு, உபதேசஞ் செய்த நான்கு வேதங்களும் நான்கு நீர்த்தாரைகளாக இப்பொழுது காண்கிறதென்றும் அந்த இடத்திலேயே முனிவர்களும், யோகிகளும் தபஸ்செய்து கொண்டிருந்தாரென்றும் அவர்கள் பொருட்டு கடும் குளிருள்ள இப்பிரதேசத்தில் சூடான ஜலத்தின் தாரை காண்கின்றதென்றும் சொல்லுகிறார்கள். மற்றும் இவ்விடம் வரும் யாத்ரீகர்கள் யாரேனும் பெருமாளைத் தரிசிக்கும்பொழுது தனக்கு மண், பெண், பொன் முதலான இச்சைகளைக்கோறினல் நாராயணன் இந்த ஆத்மகோடிகளைப் பார்த்து சிரிக்கிறாரென்றும், உலகத்தின்கண், அதாவது தன்னுடைய மலையின் கீழ், சுக துக்கங்களை இவ்வளவு காலமும் அனுபவித்து பின்னும் இக்கடின மலையின் மீதில் வந்தும் அந்த அற்ப சுகங்களைக் கேட்கிறாயே என்று அந்த ஆத்மாவின் பேரில் கருணையும் கவலையுமுற்றவராய் நீ இவ்விடம் என்னை "மோக்ஷம்" என்னும் பதவியைக் கேள் என்று சொல்லும் வண்ணம் யோகாசனத்திலிருக்கிறார்.

இவ்விடம் சுமார் 40 வயதிற்கு உட்பட்ட யாத்ரீகர்கள் வருவது வெகுவும் குறைவு—இந்த ஸ்தலத்திற்கு மேலே செல்ல முடியாது. மற்றும் போகக்கூடாது. ஏனென்றால் அவ்

விடம் சதா பனிக்கட்டிகள் பருத்தியைப் போல் ஆகாயத்தி லிருந்து விழுந்து கொண்டிருக்கிறது. மனிதர்கள் பேரில் விழுந்து அவர்களைப் பூராவும் புற்றைப்போல் பனிக்கட்டிகள் மூடிவிடும். அப்படி மூடிவிட்டால் இவர்களுக்கு திரேகத்தின் உஷ்ணம் (Animal heat) குறைந்து பிராணவாய்வு (Oxygen gas) சுவாசத்தில் குறைந்து போய் மனிதர்கள் இறந்து போய் விடுவார்கள். இவ்விடமிருந்து 4 மைல் வடமேற்கே அலக் நந்தா என்னும் கங்கையைக் கடந்து சென்றால் 2வது மைலில் **மானேகாவ்** என்னும் ஓர் சிறிய கிராமமுண்டு. அதன் மேல் புரத்தில் 2 மைல் தூரத்தில் **பசுத்தாரா** என்னும் ஓர் நீர் வீழ்ச்சியுண்டு, மலையின் பனிக்கட்டிகள் கரைந்து வரும் வீழ்ச்சி. சிலர் இதில் ஸ்நானம் செய்கிறார்கள். பத்ரீ நாரா யணன் கோவில் திறந்த சுமார் 1½ மாதங்களுக்கு மேல் தான் இவ்வீழ்ச்சி யுண்டாகிறது. மற்றைப் பொழுது பனிக்கட்டி யாய் காண்கிறது. உஷ்ணமில்லாததால் கட்டி கரைகிறதில்லை. இம்மாதிரியே கோவிலுக்கு எதிர் மலையில் **ருக், எஜுர், சாம, அதர்வன** என்னும் நீர் வீழ்ச்சிகளும் கொஞ்சம் கொஞ்சம் தூரங்களில் காண்கின்றன. இந்த 4 வேதங்களையும் **நாராய ணன் நானுக்கு** உபதேசித்த இடங்கள் அந்தந்த வீழ்ச்சிகளின் பக்கத்திலென்று சொல்லுகிறார்கள். மேலும் கண்டாகர்ண னென்னும் ஓர் அரக்கன் பத்ரியின் மேல் மலையில் திரிகிறா னென்றும் அவ்விடம் ஜனங்கள் **பசுத்தாரா**விற்கு மேல்புரம் போனால் அவர்களைக் கொன்று விடுகிறானென்றும் ஜனங்களு க்குப் பயமிட்டிருக்கிறார்கள். காரணம் மேலே சொன்ன பனிக் கட்டிகள் மேலே மூடும் கஷ்டமே. இந்த ஸ்தலத்திலிருந்து வடக்கே 10 மைல் சென்றால் திபேத் (Tibet) தேசத்தின் எல்லை ஆரம்பிக்கிறது. இந்த **பத்ரீ நாராயணன்** என்னும்

க்ஷேத்திரத்தை வட தேசத்தார் பிஷால் (பெரிய) பத்ரி என்று கூறுகிறார்கள். இம்மலைமேல் 5 பத்ரீ க்ஷேத்திரங்கள் உண்டு.

அவைகளாவன :—

1. அதி பத்ரி (Adi-Badri)—இவ்விடம் ஒரு தபாலா பீசும் பத்ரி நாராயணனின் அநேக சிறு சந்நதிகளுமுண்டு. இது பத்ரியிலிருந்து திரும்பும்பொழுது 67½ மைல் தூரமுள்ள கர்ண பிரயாகிலிருந்து இறங்கி ராம்நகர் மார்க்கம் திரும்பிவரும் வழியிலுள்ளது. கர்ண பிரயாகுக்கு 12வது மைலிலுள்ளது.


2. த்யான் பத்ரி அல்லது அனிமாதா (பழைய) பத்ரி—இது ஹிலாங்சட்டி யென்னுமிடத்திலிருக்கிறது. வழியில் இடது பக்கத்தில் செங்குத்தான மலையின் பேரில் சுமார் 5 மைல் தூரத்திலுள்ளது. ஒரு கடினமான வழி.

3. யோக பத்ரி—இது பாண்டுகேஸர் என்னுமிடத்தில் பத்ரிக்குப்போகும் வழிமேலுள்ளது. தங்க வசதிகளும் கடைகளுமுண்டு.


4. பிஷால் பத்ரி (பெரிய பத்ரி) அல்லது பத்ரீ நாராயணன் என்னும் யாத்திரை செல்லுமிடம்.

5. பாவிஷ்ய (எதிர்காலத்து) பத்ரி-இது ஜோஷிமடமென்னுமிடத்திற்கு வடகிழக்கே தபோவன மென்னுமிடத்தில் 8 மைல் தூரத்திலுள்ளது. பிஷால் பத்ரி என்னும் பத்ரீ நாராயணன் சந்நதி ஐப்பிசி மாதம் பௌர்ணமியில் மூடி விட்டபின்பு அவ்விடத்தில் பெருமாளுக்கு பூஜை யில்லாமையால் இந்த பாவிஷ்ய பத்ரி என்னுமிடத்தில் நித்யமும் பெருமாளுக்கு

பெரிய சந்நதி திறக்கும்வரையில் பூஜை நடைபெறும். ஆகையால் இப்பெயர். சமஸ்கிருதத்தில் பாவிஷ்ய என்றால் முன்வரும்காலம் அல்லது எதிர்காலம். இவ்விடம் செல்வது பிரயாசையாகும். நடந்தே செல்லவேண்டும். ஜோஷி மடத்தி லிருந்து அதிக சார்ஜுக்கு டோலிகள் கிடைக்கும். சமையல் சாமான்கள் கையில் கொண்டுபோகவேண்டும். சதாரணமாய் யாத்ரீகர்கள் வழிமேலில்லாத மற்ற பத்ரி சன்னதிகளைச் சேவிக் கிறதில்லை. யோக பத்ரி போகும் வழியிலிருப்பதால் இதை சேவித்து பிஷாலபத்ரியைச் சேவித்துத் திரும்பி விடுகிறார் கள். ராம நகரம் மார்க்கமாய்ச்செல்லும் பிரயாணிகள் மாத் திரம் அதிபத்ரி என்னும் ஸ்தலம் மார்க்கத்திலிருப்பதால் சே வைசெய்து செல்லுகிறார்கள். இந்த பத்ரிகாஸ்ரமத்தின் சந்நதி ஐப்பிசி மாதம் மூடும்பொழுது பெருமாளுக்கு எண்ணை காப்பு செய்து கம்பளி மூடி அலங்காரங்களை யெல்லாம் கழற்றி புஷ்ப பூஜைசெய்து திருவிளக்கேற்றி அவ்வாறே விளக்கை அணைக்காமல் விட்டுவிட்டு திருக்கதவைச் சாத்தி பூட்டிற்கு சீல் போட்டுவிடப்படுகிறது. பின்பும் சித்திரை மாதம் பௌர்ணமி சமயத்தில் சீலை பரீக்ஷைசெய்து பூட்டை திறக்கி றார்கள். அப்போழுது ஒவ்வொரு சமயங்களில் அந்த விளக் கின் ஜோதிவெகுமங்கலாய் எறிந்துகொண்டிருந்தாலுமிருக்கும் அல்லது முற்றிலும் அணைந்து போயிருந்தாலுமிருக்கும். கண் டிப்பாய் ஜோதி எறிந்து கொண்டேயிருக்குமென்று சொல்ல முடியாது. சாமாண்யமாய் தென்னாட்டாருக்கு அவ்விடம் சந்நதி திறக்கும்பொழுது மூடின தினம் பூஜைசெய்த புஷ்ப மும் எறிந்துகொண்டிருக்கும் திருவிளக்கும் அப்படியே இரு க்கின்றன வென்றும், அல்லது திருக்கதவு மூடினதினம் முதல் கொண்டு திறக்கும் வரையிலும் தேவர்கள் தினமும் சந்நதிக்



பத்ரிகாஸ்ரம மென்னும் பத்ரீ நாராயணன்—ஊரின் காட்க்ஷி



பத்ரீ நாராயணன் சந்நதி

குள் புஷ்ப பூஜை செய்து திருவிளக்கேற்றி போகிறார்களென்றும் ஒரு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். பின் நம்பிக்கையைப்பற்றி அடியேன் ஒன்றும் சொல்லுகிறதில்லை. ஆனால் குளிர்தேசத்தில் புஷ்பங்கள் எளிதில் வாடிப்போகாது. உஷ்ணதேசத்தில் பூஜை செய்த 1, 2 மணிக்குள் பூஷ்பங்கள் வாடிக்காய்ந்து விடும். இந்த சந்நதி பனிக்கட்டிகளால் மூடப்படுவதினால் மூடும்நாள் பூஜைசெய்த புஷ்பங்கள் சில சமயங்களில் திறக்கும்வரை வாடுகிறதில்லை. திருவிளக்குக்கும் ஒரு ஆள்காட்டி விரலைவிட பருமனான வத்தியை பொடி செய்த எள்ளுடன் கலந்துத் திரியாக்கி, நெய் குளிர்ச்சியினால் கட்டியாகாமலிருக்கும்படிக்குச் சரிபாகம் எள்நெய் (எண்ணெய்) சேர்த்துக்கலந்து திரியையும் அதில் துவைத்து, புட்டி விளக்கைப் போலிருக்கும் ஒரு குடத்தில் ஷி திரியையும் எண்ணெயையும் கலந்துத் திருவிளக்கேற்றி விடுகிறார்கள். அது பனிக்கட்டிகள் மூடிப்போன அறையிலிருப்பதால் பிராணவாய்வுஜாஸ்தியாயில்லாத சமயத்தில் புகைக்கட்டிமங்கலாக எறிகின்றது. ஒரு வருஷத்தில் கதவைத்திறக்கும்பொழுது இப்படி எறிவது பார்க்கலாம், சில வருஷங்களில் பூர்த்தியாய் திருவிளக்கு ஆரிப்போயிருக்கும்—அந்நாட்டார் இந்த விஷயங்களை முக்கியமாய் கவனிக்கிறதில்லை. இந்த சின்னங்களை வெகு விசேஷமாயும் ஆச்சர்யமாயும் அவர்களால் கொண்டாடப்பட்டால் இந்த ஜோதி தரிசினத்தை யாத்ரீகர் பெரும்பாலோர்க்காகிலும் காட்டி பின் பூஜைக்கிரமங்கள் நடத்துவார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. அடியேன் இவ்விஷயத்தை தென்னாட்டாரால் கேள்விப்பட்டு திருக்கதவு திறக்கும் பொழுது சந்நதிக்குள் 11-5-32ல் சென்றிருந்தேன். கேள்விப்பட்ட மாதிரி ஜோதி தரிசினம் கிடைக்கவில்லை. சந்நதி சம்பந்

தப்பட்ட பூஜை சிப்பந்திகளைக் கேட்டபொழுது அவர்கள் அம் மாதிரி ஒன்றும் கிடையாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்கள். அவ்விடம் திருக்கதவைத் திறக்கும் பொழுது சுமார் 30-40 கௌரவமுள்ள பொருப்பான யாத்ரீகர்களைவிட ஆயிரக்கணக்காக வந்திருக்கும் அநேக சாதுக்கள், யாத்ரீகர்கள் முதலானவர்களில் யாரையும் அதிகமாய்ச் சந்நதிக்குள் விடுகிற தில்லை. இவர்களில் கவர்ண்மெண்ட் தரப்பில் ஓர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தான் பெரியவர். அவரும் கோவில் பூஜாரியான ராவல் என்பவரும் தான், பூட்டின் சீலை பரிசோதித்து சீலை உடைத்து பூட்டைத் திறக்கிறார்கள். கதவைத் திறந்தவுடன் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் உள்ளே நுழைய எத்தனப்படு கிறார்கள். ஆனால் கோவில் சிப்பந்திகள் கதவை மூடிக்கொண்டு கொஞ்சம் மரியாதையாகக் காண்கிற யாத்ரீகர்களை மாத்திரம் விடுகிறார்கள். அடியேன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரையும் அப்பொழுது ஜோதியின் விஷயமாய்க் கேட்டதில் அவரும் மற்றவர்களைப் போலவே விடைகொடுத்தார். இதுதான் ஜோதி தரிசனத்தின் சரித்திரம்-அடியேன் ஜோதி தரிசனார்த்தத்தின் பொருட்டு சென்றிருந்த பொழுது **பத்ரியில்** நடந்த விஷயம் இது உண்மை.

பிரம்ம கபாலம்.

இது சந்நதிக்கு வடவண்டை 2 பர்லாங்குக்குள் அலக் நந்தா ஆற்றின் வலபுறத்திலேயிருக்கும் ஒரு ரொட்டியின் வடிவமாயிருக்கும் பெரிய-கற்குண்டு. இதின் பேரில் ஒரு தகடு (Zinc) மண்டபம் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பாறை யின் பெயரே **பிரம்ம கபால**மெனப்படும்—யாத்ரீகர்களுக்கு அவ்விடமிருக்கும் பண்டாக்களெனப்படும் பிராமண புரோகி

தர்கள் இப்பாறையின் பேரில் பிதுர் தர்ப்பனம் செய்தால் பிதுர்களுக்கு மோக்ஷமுண்டுயென்னும் ஆசை நம்பிக்கைகளை உண்டு பண்ணி சந்நதியில் பருத்த சிகப்பு அரிசியில் செய்திருக்கும் தளிகையை விலைக்குக்கொண்டு வரும்படி செய்து பிதுர்த்தர்ப்பனம் பிண்டம் கொடுக்கிறார்கள். சந்நதியில் பிண்டம் கொடுக்கும் ஒரு கைபிடி தளிகையின் விலை ரூ. 1. ஷை பண்டாக்கள் பிண்டம் கொடுக்கும் யாத்ரீகனை உட்காரவைத்து மந்திரக்கிரமங்கள் செய்து பின்பு அவனை சத்தியமாய் அவனுக்கு எவ்வளவு சொத்துக்கள் உண்டென்று சொல்லும்படிகேட்டு அதில் தனக்கு (பண்டாவுக்கு) எவ்வளவு பாகம் கொடுப்பானென்றும் பலவாறு ஹிம்சித்துக்கேட்டு சரியான வரும்படி ஷை பண்டா தனக்கு செய்து கொள்ளுகிறான். பாபம்—ஒன்றுமறியாத யாத்ரீகர்கள் இம்மாதிரியும் மதக்கோட்பாடான நம்பிக்கையின் பேரில் மோசம் போய்விடுகிறார்கள் யாத்ரீகர்களே! ஜாக்கிரதையாயிருங்கள் பிரம்ம கபாலத்தில்.

செல்லும் மார்க்கம் :—(E. I. Ry.) ஈஸ்டு இந்தியன் ரயில்வே மார்க்கமாய் ஹரித்வாரம் என்னும் ஸ்டேஷனில் இறங்கவேண்டும். இந்த ஹரித்வாரம் என்னும் ஸ்டேஷன் டெல்லி என்னும் நகரத்திற்கு வடக்கேயுள்ளது.

ஹரித்வாரம்:—இது ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த ஸ்தலமன்று. புராண ஸ்தலம். இவ்விடம் விஷ்ணுபாதமென்னுமிடத்தை "ஹரிகி பைரி" (Hari-ki-Pairhi) என்று வட நாட்டார் வழக்குகிறார்கள். இது கங்கை நதியின் தென் கரைப் பக்கத்திலுள்ளது. இந்த இடத்தில் ஸ்நானம் செய்தால் புண்ணிய மெனப்படும். கங்கையின் இரிகேஷன் வர்க்ஸ் (Irrigation Works of Ganges) இந்த ஸ்தலத்தில் தான்

ஆரம்பமாகிறது. இவ்விடம் கங்கை வெகு சிரிய அகலமுள்ள நதியாயிருக்கிறபடியால் நதிக்கு அணையைக் கட்டி ஒரு பெரிய வாய்க்கால் பயிர் சாகுவளிக்காக வெட்டப்பட்டு நதியின் வல புறமாய் ஓடுகிறது. இந்த வாய்க்கால் கங்கை நதியின் தென் பாகமாயே ஓடுகிறது. இந்த வாய்க்காலுக்குத் தென் பாகத்தில் வெகு விஸ்தீர்ணமான கற்களால் பரவப்பட்ட காலி இடமிருக்கிறது. இதில் தான் சாயந்திர காலங்களில் தின்பண்டம் கடைகளும் சாயங்காலத்தில் யாத்ரீகர்கள் சேர, கதா கால க்ஷேபங்களும், பிரசங்கங்களும் முதலான மனோகரமான விஷய வேடிக்கைகள் நடைபெருகின்றன. இந்தக்காலி நிவேசனத்தின் தென்னண்டைபக்கத்தில் அனேககோவில்களும், மடங்களும், சாதுகளின் ஆச்சிரமங்களும் கட்டியிருக்கிறார்கள். வெகு பல தேசத்தாருடைய மடங்களும், விஸ்ராந்தி சாலைகளுமுண்டு. இந்த ஸ்தலத்திற்கு 14 மைல் வடக்கிலுள்ள இடத்தின் பெயர் ரிஹிகேஸ். இதை ரிஷிகேஸ் என்றும் சாமாணியமாய்ச் சொல்லுகிறார்கள்.

ரிஹிகேஸ் அல்லது ரிஷிகேஸ்—இந்த ஸ்தலத்தில் கங்கை நதி ஹிமயகிரி பர்வதித்திலிருந்து மைதான சமபூமி நாடாகிய இவ்விடத்திலிறங்குகிறது. சுத்தமான வெகு சிரிய நதி. ஜலம் கண்ணாடியைப் போலிருக்கும். இவ்விடத்தில் அநேகதேசத்தாருடைய தர்மசாலைகளும் அவைகளில் சதாவர்த்தியும் நடக்கிறது. இது சிரிய கிராமம். நூற்றுக்கணக்கான சாதுக்கள் சதா வசித்துக்கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் கங்கைக் கரையின் மீது 1½ மைல் தூரத்திலுள்ள **சுவர்க்கத்வார்** என்னுமிடத்தில் (இது லக்ஷ்மன் ஜுலா போகும் வழியிலுள்ளது), அனேக சாதுக்கள் குன்றுகளின் குகைகளிலும் சிரிய குடிசைகளிலும் வசிக்கிறார்கள். இந்த சாதுக்களும் மற்ற

எனையோருக்கும், எப்பொழுதும் பசியில்லாமலிருக்கும்படி சதாவர்த்தி இவ்விடத்தில் நடக்கிறது. கோதுமை மாவும் பருப்பும் கொடுக்கிறார்கள். ரொட்டியும் சமைத்த பருப்பும் வேண்டுமானால் கொடுக்கிறார்கள்.

ஹரித்துவாரத்திலிருந்து ரிஷிகேஸ் வடக்கே 14 மைல் தூரம். ரயில் வண்டியும், மோடார் பஸ்களும், குதிரை டாங்காக்களும் யாத்திரை காலங்களில் டோலிகளும் கிடைக்கும். ரிஷிகேஸத்திலிருந்து பத்ரீ நாராயணன் ஹிமயகிரி மலைமேல் 169 மைல் தூரத்திலிருக்கிறது. வண்டிப்பாதையல்ல. கால்பாதைத்தான். ஆனால் போகவர 4 கூலிகள் சுமக்கும் டோலிகள் (Jampan) கிடைக்கும். ரிஷிகேஸிலிருந்து கேதார் நாத் தரிசினம் செய்துக்கொண்டு பத்ரீ நாராயணன் போய் பின்பும் ரிஷிகேஸ் திரும்பிவர பிரயாணி ஒன்றுக்கு ரூ. 120—150 டோலி சார்ஜ் கொடுக்கவேண்டும். மற்றும் இந்த டோலி ஆட்கள் வழியில் பிரயாணிகளை வெகு இம்சைசெய்து தங்கள் தினம் சாப்பாட்டிற்கு, பேசின சார்ஜைவிட அதிகமான பணம் பறித்து விடுவார்கள்.

ஒரு குடும்பத்தார்கள் ஒன்றுக்கு மேல்பட்ட டோலியை ஏற்படுத்தினால் இந்த கூலியாட்களுக்கு அவர்கள் கேட்கும் ஜாஸ்தி பணம் கொடாவிட்டால் இவர்கள் டோலிகளை தூரம் தூரமாய் வெவ்வேறாகப் பிறித்துவிட்டு ஒன்றுக்கொன்று சேராமல் போவார்கள். வெகு துஷ்டர்கள், ஆனால் திருடர்களல்ல. ஆகையால் தான் இந்த டோலி ஆட்களையும், கூலியாட்களையும் டெஹரி மஹாராஜா தன் எல்லையாகிய முனிகிரடி (Muni-ki-reti) என்னும் ஊரிலிருந்து—(Workman's Breach of Contract Act) வர்க்மென்ஸ் பிரீச் ஆப்

கான்ட்ராக்ட் ஆக்டின் பிரகாரம் இவர்களின் பெயர் முதலான துவைகளை ரிஜிஸ்டர் செய்துகொண்டு இந்த டோலி கூலியாட்களை பிரயாணிகளுடன் அனுப்பிக்கொடுக்கிறார்கள்.

Haridwar—Rihikesh—ஹரித்வாரம்—ரிஹிகேஸ் வழியின் விவரம்.

ஹிரித்வாரத்திலிருந்து ரிஹிகேஸ் என்கிற ரிஷிகேஸ்—14 மைல்கள்.

ரிஷிகேஸத்தில் அனேக தர்மசாலைகளுண்டு. உத்தர காண்டம் பாபா காலா கம்லிவாலே என்னும் சாது வாசஸ்தானமாயிருந்த மடம் உண்டு. இந்த மடத்தில் ஏழையாயிருக்கும் யாத்ரீகர்களுக்கும் அனேக சாதுக்களுக்கும் மலைமேல் போய் வரும் பொழுது போர்த்திக்கொள்ள கம்பளியும், சாப்பாட்டிற்கு சதாவர்த்தி சீட்டுகளும் கொடுக்கிறார்கள். மலையின் மேல் அனேக தங்குமிடங்களில் ஷை சாதுவின் சதாவர்த்தி மடங்களுமுண்டு. சீட்டைக் காண்பித்தால் சாப்பாட்டிற்கு கோதுமை மாவு, அரிசி, பருப்பும் எறிக்கரும்பிற்காக சொற்ப திரவியமும் கொடுக்கிறார்கள்.

ரிஹிகேசத்திலிருந்து-முனிகிரேடி (Rihikesh—Muni-ki-reti) 1½ மைல். இவ்விடத்தில் மூட்டை சுமப்பதற்குக் கூலியாட்களும் டோலிகளும் கிடைக்கின்றன. டெஹ்ரி (Tehri) மஹாராஜாவின் சர்க்காரால் இவ்விடம் கூலி ஏஜென்ஸி ஆபீஸ் வைத்துக்கொண்டு கூலிகளிடம் அக்ரிமெண்டு (Agreement) வாங்கிக்கொண்டு அவர்களை அனுப்புகிறார்கள். சாதாரணமாய் 1 மணுவுள்ள பாரத்தைச்சுமக்க ஒரு கூலியாளுக்கு பத்ரி போய்வர ரூ. 25க்குக் குறையாமல் கொடுக்கவேண்டும். யாத்ரீ

கர் வேறு வேருகக் கூலிகளை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். ஒரு பார்ட்டியான (party) 4-5 யாத்ரீகர்கள் கூடிச்சேர்ந்து பிரயாணம் செய்யும் பக்ஷத்தில் பொதுவாய்ச் சாமான்கள் 2-3 கூலியாட்கள் வசத்திலிருந்தாலும் பாதகமில்லை. கூலிகள் கூலி பணத்திற்கு ஆசைப்பட்டு ஒருவரையொருவர் அறியாத 2-3 பிரயாணிகளின் மூட்டைகளை ஒரு கூலியே ஒவ்வொருவரிடமும் கூலி பேசிக்கொண்டு எடுத்து வருவது வழக்கம். அப்படிச்செய்வதினுல் ஒரு பிரயாணி ஒரு தினத்திற்கு 10 மைல் செல்வார். மற்றவர்கள் அதிகம் குறைவு தூரம் செல்லுவார்கள். கூலியாள் ஒரு பிரயாணி ஜதையில் வந்தால் மற்றவர்களுக்கு தங்கள் சாமான் கிடையாத கஷ்டம் வழியில் நேறிடும். ஆகையால் கூடுமானவரையில் வெவ்வேறு கூலிகளை அமர்த்த வேண்டும். மேலும்பிரயாணிகள் கூலிகளை குறிப்பிட்ட மைலில் இருக்கும்படி சொன்னுல் கூலி தப்பாமல் அல்விடம் கார்த்துக் கொண்டிருப்பான். திருட்டு பயம் வழியில் கிடையாது. மலை வழி முழுவதும் திருடர், காட்டு மிருங்கள், பாம்பு பூச்சிகள் என்ற பயம் ஒன்றுமே கிடையாது. வழி வெகு சுலபம், சில சில விடங்களில் ஏற்றம். வழியில் எவ்விடமும் குடிக்க ஊற்று ஜலம் கிடைக்கும். சிறிது சிறிது தூரங்களில் கடைகளுண்டு. சாப்பாட்டு சாமான்கள், பால், மிட்டாய் தினுசுகள்யாவும் தாராளமாய்ச் சுலப விலைக்குக் கிடைக்கும். ஒவ்வொரு கடைக்காரனும் தன்கடையின் பக்கத்தில் குடிசைகளைக் கட்டிவைத்துக்கொண்டிருக்கிருன். பிரயாணிகள் அந்த இடம் சேர்ந்ததும் (அவ்விடங்களுக்கெல்லாம் ஹிந்தி பாஷையில் 'சட்டி' என்று பெயர்) கடைக்காரன் தங்க இடம் கொடுக்கிருன். சமையல் செய்ய சாமக்கிரியைகள் அவனிடம் வாங்கிக்கொண்டால் சமையல் செய்ய பாத்திரங்களும், அடுப்பும், கீழே போட்டுக்

கொள்ள பாய், போற்றிக்கொள்ளகம்பளிகளும் கொடுக்கிறுன். இரவில் தங்கினுலும் இந்த சௌகரியங்களை அமைத்துக்கொடுக்கிறுன். யாத்ரீகர்கள் அந்த இடத்தை விட்டுச்சென்றதும் உடனே சுத்திசெய்து மற்ற யாத்ரீகர்களை எதிர்பார்க்கிறுன்—யாத்ரீகர்களை இந்த கடைகாரர்கள் வெகு மரியாதையாயும் ஜாக்கிரதையாயும் கவனிக்கிறுர்கள்.—பாதையோ 3 அல்லது 4 அடி அகலமிருக்கும்—ஒரு பக்கம் மலே மற்ருெரு பக்கம் சுமார் 300—500 அடி பாதாளத்திலுள்ள கங்கை நதி ஓடுகிறது. பிரயாணிகள் ஜாக்கிரதையாய் வழியைப் பார்த்து நடக்க வேண்டும். அஜாக்கிரதையாய் நடந்தால் பாதாளத்திலுள்ள நதியில் விழுந்து விடுவார்கள். மற்றும் மேலே வாமுடியாது. அப்படியே தான் மடியவேண்டும்.

நடக்கும் பாதைக்கும் பாதாளத்தில் ஓடும் அலக்நந்தா என்னும் கங்கைக்கும் சுமார் 500 அடிக்குக் குறையாத உயரம் உண்டு. "சட்டி" யென்ருல் தங்குமிடம். அவ்விடம் கடைகளும் ஜல வசதிகளுமுண்டு.

முனிகிரேடியிலிருந்து லக்ஷ்மன் ஜூலா—(Muni-kireti to Lakshman Joola) 1¼ மைல்.

லக்ஷ்மன் ஜூலாவிலிருந்து கருட சட்டி அல்லது கருா சட்டி (Lakshman Joola to Garura Chatti) 2 மைல். இது பார்க்க வெகு மனேஹரமான இடம்.

கருா சட்டியிலிருந்து பூல்வாரி (Garura Chatti to Phoolwari) 2 மைல்.

பூல்வாரிலிருந்து குலார் சட்டி (Phoolwari to Gular Chatti). 2 மைல். இவ்விடம் ரஸ்தா சுலபமாயும் சோயுமிருக்கிறது. நடக்க ஆனந்தமாயிருக்கும்.

7. குலார் சட்டியிலிருந்து நயிமோஹன் (Gular Chatti to Nayee Mohan) 3 *மைல். இதுவரையிலும் பாதை சுலபம். முன்னுக்கு 4 மைல் ஏற்றமாயிருக்கும்.*

8. நயிமோஹனிலிருந்து சோடி (சிறிய) பிஜனி (Nayee Mohan to Choti Bijani) 2 *மைல். இதன் மத்தியில் குடிக்கும் ஜலவசதி குறைவு.*

சோடி (சிறிய) பிஜனியிலிருந்து படி (பெரிய) பிஜனி (Choti Bijani to Barhi Bijani) 1 *மைல். இவ்விடம் ஒரு முசாபரி பங்களாவிருக்கிறது.*

9. படி (பெரிய) பிஜனி—குண்ட் சட்டி (Barhi Bijani to Kund Chatti) 3 *மைல். இவ்விடம் நல்ல பால்கிடைக்கும்.*

10. குண்ட் சட்டி—பண்டார்பேல் (Kund Chatti to Bandar bhel) 3 *மைல். இவ்விடமிருந்து வழி இறக்கமாய் 3 மைல் போகிறது.*

11. பண்டார்பேல்—மஹாதேவ் சட்டி (Bandarbhel to Mahadev) 3 *மைல். இவ்விடமிருந்து வழி சமமாயிருக்கிறது. கங்காநதியிலிறங்கி ஜலம் சாப்பிடவும் ஸ்நானம் செய்யவும் அனுகூலமாயிருக்கிறது. இவ்விடமிருந்து 1 மைல் தூரத்தில் முசாபரி பங்களாவிருக்கிறது.* ராம்பட்டி சட்டி *யென்னும் ஓர் சட்டியுமிருக்கிறது.*

12. மஹாதேவிலிருந்து சேமல் சட்டி (Mahadev to Semul Chatti) 4 *மைல். வழி ஏற்றமாயிருக்கும்.*

13. சேமல் சட்டி—கண்ட் சட்டி (Semal Chatti to Kand Chatti) 3 *மைல். வழி நேராயும் சமமாயுமுண்டு. இவ்விடத்தில் ஆஸ்பத்திரியுமிருக்கிறது.*

14. கண்ட் சட்டி—பியாஸ்காட் (Kand Chatti to Byasghat)—4 மைல். வழி யேற்றம்–இவ்விடம் ஒரு தபாலா பீசும் முசாபரி பங்களாவுமுண்டு. இல்விடமிருந்து வழி சுமார் 36 மைல் வரைக்கும் ஏற்றமும் இறக்கமுமாயிருக்கிறது.

15. பியாஸ் காட்—உம்ரசு (Byasghat to Umrasu) 5 மைல். இவ்விடம் சில ஜனங்கள் எப்பொழுதும் குடியிருக் கிறார்கள்.

உம்ரசு—ஸோடே சட்டி (Umrasu to Sode Chatti) 3 மைல். ஏற்றமுமிறக்கமும்.

16. ஸோடே சட்டி–தேவப்பிரயாக் (Sode Chatti to Devparayag) திருக்கண்டங் கடிநகர் அல்லது கண்டமென் னும் கடிநகர்) 1 மைல். இவ்விடத்தில் அலக்நந்தா என்னும் நதியும், பாகீரதி என்னும் நதியும் சந்திக்கின்றன. சந்திக்கு மிடத்தின் மேல் விஷ்ணு கோயிலிருக்கிறது. ஆழ்வார் மங் களாசாசனமான சந்நதி. இவ்வட நாட்டிலேயே விவாகம் செய்துக் கொண்டு பழகின தென்னாட்டு பிராமணனின் பூஜை. இது பெரிய கிராமம். பத்ரீ நாராயணன் கோயிலில் வேலை செய்யும் பிராமண சிப்பந்திகளும், பண் டாக்களெனப்படும் பிராமண புரோகிதர்களும் இந்த கிராமத் தில் வசிக்கிறார்கள், இவர்கள் இவ்விடமிருந்தே பிரயாணி களை வசப்படுத்திக் கொண்டு அவர்களைத் தொடர்ந்தே பத்ரி செல்லுகிறார்கள். இவ்விடம் சத்திரங்களும், கடைகளும் உண்டு. அலக் நந்தா கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்யலாம். சங்கமத்தில் ஸ்நானம் செய்து பிண்டம் விடுகிறார்கள். இந்த ஊர் ஹரித்துவாரத்திலிருந்து 58 மைல் தூரத்திலிருக்கின்றது. பிரயாணிகள் மலையில் பிரயாணம் செய்யும் பொழுது மலைக்

காற்றும் ஜலமும் அவர்களுக்குப் பிடிபடாவிட்டால் இவ்வூர் சேருவதற்கு முன்பே அவர்கள் காயலா வடைவார்கள். முக்கியமாய் வயிற்றுக் கடுப்பும், ஜுரமும் காணும். இவ்வூர் சேரும் பொழுது தேக சௌகரியமாயிருந்தால் முன்னுக்கு யாத்திரை போகலாம். வரும் வழியில் வியாதியாகி இவ்விடம் சேர்ந்து 1 வாரம் வரையிலுமிருந்து அவர்களுக்கு வியாதி சுகப்படாமல் போனல் அநேக பிரயாணிகள் தங்கள் ஊருக்கு இவ்விடமிருந்து திரும்பி விடுவார்கள். அப்படி திரும்புவதே உத்தமம். தேவப்பிரயாகை தப்பி சுகமாய் முன்பு போனல் கண்டிப்பாய் பத்ரி தரிசினம் செய்து திரும்பலாம். இந்த ஊரிலிருந்தே பாகீரதி நதிக்கரையின் வழியாய் யமுனேத்ரி (யமுன உதிக்குமிடம்) கங்கோத்ரி (கங்கை உதிக்குமிடம்) போகும் பிரயாணிகள் பிரிந்து போவார்கள்.

தேவப் பிரயாகிலிருந்து குலசு சட்டி (Devaprayag to Kulasu Chatti) 5 மைல்.

17. குலசு சட்டி—ராணி பாக் (Kulasu to Rani Bag) 2½ மைல். இவ்விடம் சதா வசிக்கும் ஜனங்களும், வீடுகளுமுண்டு.

18. ராணி பாகிலிருந்து கோல்ட (Rani Bag to Kolta) 1½ மைல். இவ்விடம் முசாபரி பங்களாவிருக்கிறது.

19. கோல்ட—ராம்பூர் (Kolta to Rampur) 2 மைல்.

ராம்பூர்—ஜனக ஆஸ்ரமம் அல்லது ஜினசு (Rampur to Janaka Ashram or Jinasu) 1½ மைல். இவ்விடம் ஜனக சக்ரவர்த்தி தபசு செய்தவிடமென்று சொல்லுகிறார்கள். இவ்விடம் ஜலக்கஷ்டம் அதிகம். இங்கு தங்கும் வசதி கிடையாது.

சில குடிசைகளிருக்கின்றன. முன்னுக்கு போய் வில்வ கேதார் செல்லவேண்டும்.

20. ஜினசிலிருந்து வில்வகேதார் (Jinasu to Vilva Kedar) 4 மைல். ஒரு சிவன் கோயிலிருக்கிறது.

21. வில்வகேதாரிலிருந்து ஸ்ரீநகர் (Vilva Kedar to Srinagar) 3 மைல். இந்த ஸ்ரீநகர் என்பது காஷ்மீர் ராஜ்யத்தைச் சேர்ந்ததல்ல. இது யுனைடெட் பிராவின்ஸஸ் (U. P.) என்கிற ஐக்கிய மாஹாணத்திலிருக்கும் கார்வால் (Garhwal) ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய ஊர். ஹிமயகிரியில் பத்ரி வழியின் பேரிலுள்ள எல்லா ஊர்களைவிட இவ்வூர் பெரிது. அனேக தினுசுக் கடைகளும், சத்திரங்களுமுண்டு. பெரிய ஷாப்புக் கடைகளுமுண்டு. பிரயாணிகர்களுக்கு தேவையான எல்லா பதார்த்தங்களும் கிடைக்கும். பம்பாய், மதராஸிலுள்ள பெரிய ஷாப்புக்கடைகள் போல் இவ்விடம் எலெக்ட்ரிக் டார்ச்சுகள் டிரை (டார்ச்சு) செல்கள், பனியன்கள், கம்பளிகள், கை, கால் பைகள், ரப்பர் மிதியடிகள், முன்னுக்கு வேண்டிய சகலவிதமான சாமான்கள் கிடைக்கும். தபால், தந்தி ஆபீஸ்கள் உண்டு.

22. ஸ்ரீநகரிலிருந்து சுக்ரட (Srinagar to Sukrata) 5 மைல். இந்த பாகத்தின் வழியைக் காலை 10-11 மணிக்குள் நடந்துவிட வேண்டும். இல்லாவிடில் மலைச் சந்தாயிருப்பதால் மத்தியான காலங்களில் செல்லும்பொழுது வெகு சூடாயிருக்கும். கஷ்டமாய்த் தோன்றும்.

23. சுக்ரடவிலிருந்து பட்டி சேர (Sukrata to Bhatti Sera) 3 மைல். இவ்விடமிருந்து 1 மைல் தூரத்தில் சன்டி கால் (Chanti Khal) என்னுமிடத்தில் ஒரு முசாபரி பங்களாவிருக்கிறது.

24. பட்டி சோரவிலிருந்து கங்கரா (Bhatti Sera to Khankara) $3\frac{1}{2}$ மைல். 1 மைல் நடந்தபின் வழி இறக்கம்.

25. கங்கராவிலிருந்து நார்கோட (Khankara to Narkota) $2\frac{1}{2}$ மைல். வழி ஏற்றமுமிறக்கமும்.

26. நார்கோடவிலிருந்து குலாப்ராய் (Narkota to Gulab-rai) $3\frac{1}{2}$ மைல். வழி ஏற்றமுமிறக்கமும்.

27. குலாப்ராயிலிருந்து ருத்ரபிரயாக் (Gulabrai to Rudraprayag) இது ஒரு சிறிய கிராமம். தபால், தந்தி ஆபீஸ் களும் உண்டு. கடைகள் சத்திரங்களிருக்கின்றன. இவ்விடம் அலக் நந்தா என்னும் கங்கையும், மந்தாக்னி என்னும் கங்கை யும் சங்கமமாகின்றன. இறங்கி ஸ்நான சங்கல்பங்கள் செய்ய லாம். ஸ்நான கட்டத்தின் மீது ஒரு சிவன் கோயிலிருக்கிறது. இவ்விடத்திலிருந்து கேதார்நாத் என்னும் சிவஸ்தலம் போகும் யாத்ரீகர்கள் பிரிகிறார்கள். வழி மத்தாக்னி நதியின் கரை யின் மேலே 54 மைல் தூரம் சென்றால் கேதார்நாத் என்னும் சிவஸ்தலம் சேரலாம். யாத்ரீகர்கள் இம்மார்க்கமாய் கேதார் நாத் போய் தரிசினம் செய்துக் கொண்டு வேறே வழியாய்த் திரும்பி பத்ரி போகும் வழியிலுள்ள சமோலி என்னுமிடத்தில் சேருகிறார்கள். வீர வைஷ்ணவர்களாயுள்ள பஞ்சாப் மற்றும் வங்காள தேசத்துப் பிரயாணிகள் கேதார் நாத் தரிசினம் செய்யாமல் நேராக பத்ரிக்குக் கர்ணபிரயாக் வழியாய்ச் செல்லுகிறார்கள். ருத்ரபிரயாகிலிருந்து சுமார் 46 மைல்கள் நேரான வழி.

ருத்ரபிரயாகிலிருந்து கர்ணபிரயாக் மார்க்கம் பத்ரிக்குப் போகும் வழியின் விவரங்கள்.

28 ருத்ரபிரயாகிலிருந்து சிவநந்தி (Rudraprayag to

Shivanandi) 7½ மைல் தூரம். வழியின் மத்தியில் வேறே சட்டிகள் கிடையாது, ஒரே நேராக இந்த 7½ மைலும் நடக்கவேண்டும்.

29. சிவநந்தியினின்றும் கமேரா (Shivanandhi to Kamerha) 4⅛ மைல்.

30. கமேராவிலிருந்து சோடா பீபல் (Kamerha to Chota Peepal) 6 மைல். இங்கே சில வீடுகளிருக்கின்றன.

31 சோடா பீபலிலிருந்து கர்ணபிரயாக் (Chota Peepal to Karnaprayag) 4 மைல். இந்த ஊரில் தர்ம சத்திரங்களும், தபால், தந்தி ஆபீசுமிருக்கிறது. சுமாராய்ப் பெரிய ஊர். இவ்விடம் அலக்நந்தா கங்கையும், பிண்டார் கங்கையென்னும் நதியும் சங்கமமாகின்றன. கங்கையிலிறங்கி ஸ்நானம் செய்யலாம். ராம்நகர் காத்கூடத்திலிருந்து பத்ரிக்கு வரும் பாதை இவ்விடத்தில் சந்திக்கிறது.

கர்ண பிரயாகிலிருந்து கலமாகிரி சட்டி (Karnaprayag to Kalamagiri) 2 மைல்.

கலமாகிரி சட்டியிலிருந்து உம்மத்த சட்டி (Kalamagiri to Ummatha) 2 மைல்.

32. உம்மத்த சட்டியிலிருந்து ஜெய்கண்டி சட்டி (Ummatha to Jaikandi) ½ மைல்.

33. ஜெய்கண்டியிலிருந்து நங்கசு சட்டி (Jaikandi to Nangasu) 2 மைல்.

34. நங்கசிலிருந்து சோன்ல சட்டி (Nangasu to

Sonla) 3 மைல். இவ்விடம் முசாபரி பங்களாவிருக்கிறது. சில வீடுகளுண்டு.

35. சொன்லவிலிருந்து நந்த பிரயாக் (Sonla to Nandaprayag) 3 மைல். இவ்விடம் அலக்நந்தா கங்கையில் நந்தாக்கினி என்னும்கங்கை சங்கமமாகிறது. இதுஏறக்குறைய பெரிய ஊர். சத்திரங்களுண்டு. ஜல வசதியுமுண்டு. கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்யலாம். கடைகளுண்டு. பத்ரியின் போட்டோ படங்கள் இவ்விடம் கடைகளில் விற்கிறார்கள். இவ்விடமிருந்து வேரே ஒரு மார்க்கம் காட்டு மார்க்கமாய் ராம்நகர் காத்கூடம் (கர்ணபிரயாகுக்குப் போகாமல்) பிரிகிறது. ஆனல் இவ்வழியில் போனல் சாப்பாட்டிற்குக் கஷ்டம். வெளி தேசத்து ஜனங்கள் இம்மார்க்கம் செல்லுவதில்லை.

நந்த பிராயாகிலிருந்து மிட்டன சட்டி (Nandaprayag to Mittana) 3 மைல் ஏற்றம.

மிட்டன சட்டியிலிருந்து கோஹேட் சட்டி (Mittana to Kohed) 2 மைல்.

36. கோஹேட் சட்டியிலிருந்து சமோலி (Kohed to Chamoli) 2 மைல். இது பெரிய ஊர். தபால், தந்தி ஆபீஸ்களுண்டு. தர்மசாலைகளும், மிட்டாய்க் கடைகளுமுண்டு. ஒரு தர்ம ஆஸ்பத்திரியிருக்கிறது. கேதார் நாத் போன பிரயாணிகள் யாவரும் இவ்விடம் வந்து தான் பத்ரீ நாராயணன் போக வேண்டும். கங்கையில் இறங்கி ஸ்நானம் செய்யலாம்.

37. சமோலியிலிருந்து மத (Chamoli to Matha) 2 மைல். இவ்விடம் அழகிய வாழை முதலிய மரங்களடைந்த தோப்புகள் உண்டு. பார்க்க ரமணீயகரமான இடம்.

மதாவிலிருந்து சின்க சட்டி (Matha to Chinka) 2 மைல்.

38. சின்கா சட்டியிலிருந்து சியசய்ன் (Chinka to Siya Sain) 2 மைல். ஹரித்துவாரத்திலிருந்து இது 143வது மைல்.

39. சியாசய்னிலிருந்து ஹட் (Siya Sain to Hat) 1 மைல். இவ்விடமிருந்து 1 மைல் ஏற்றமான வழி.

40. ஹட்லிருந்து பீபல் கோடி (Hat to Peepal Koti) 2 மைல். இதுவும் ஏற்றமான வழி. இவ்விடம் முசாபரி பங்களாவிருக்கிறது. அனேக வீடுகளும், கடைகளுமுண்டு. சத்திரங்களும், காலி வீடுகளுமுண்டு. பிரயாணிகள் எவ்விடம் வேண்டுமானாலும் தங்கலாம். இந்தக் கடைகளில் ஹிமயகிரி பர்வதத்திலுண்டாகும் மருந்து மூலிகைகளும், கஸ்தூரி, கமரி மிருகங்களின் உணர்ந்த (பதனமான) தோல்களும், கமரி மயிர்களும் கஸ்தூரி சட்டங்களும் வெகுவாய்க் கிடைக்கும். சிலாஜித் என்னும் கல்லிலுண்டாகும் ஓர்வித கருப்பு நிறமான பால் இவ்விடம் கிடைக்கும். இதை நெருப்பினாலும், சூரிய உஷ்ணத்தினாலும், சுத்தி செய்து விற்கிறார்கள். சூரிய உஷ்ணத்தால் சுத்தி செய்ததே உத்தமம். ஆனால் இந்த சிலாஜித்தை வைத்தியார்களாயிருப்பவர்கள் மாத்திரம் வாங்க வேண்டுமே யொழிய சாமானிய யாத்ரீகர்கள் வாங்கக்கூடாது. வியாபாரிகள் நெருப்பில் தயாரானதை சூரிய உஷ்ணத்தினாலாயிற்றென்று ஏமாற்றுவார்கள்.

41. பீபல் கோடியிலிருந்து கருா கங்கை (Peepal Koti to Garura Ganga) 4 மைல். இவ்விடமிருந்து வழி 6 மைல் வரையிலும் சமமாயிருக்கும்.

கருா கங்கையிலிருந்து தங்கனி (Garura Ganga to Tangani) 2 மைல். சுமாராய் ஏற்றம்.

42. தங்கனியிலிருந்து பாதாள கங்கை (Tangani to Patal Ganga) 2 மைல். இறக்கமான வழி. இவ்விடத்தில் வழி அபாயகரமாயிருக்கும். ஏனென்றால் பக்கத்திலுள்ள மலை வருஷா வருஷம் சறிந்து வழியை மூடிக்கொள்ளுகிறது. ஆகையால் சில சமயங்களில் சிறிது சுற்றாய் மலை மீதில் ஏறிப்போக வேண்டும். நடக்கும் பொழுது வழி எப்படியிருக்கிறதென்று விசாரித்து முன் போகவேண்டும்.

43. பாதால கங்கையிலிருந்து குலாப் கோடி (Patal Ganga to Gulab Koti) 2 மைல். இவ்விடம் முசாபரி பங்களாவிருக்கிறது.

44. குலாப் கோடியிலிருந்து ஹிலாங்கு சட்டி அல்லது குமார சட்டி (Gulab Koti to Helong or Kumar Chatti) 2½ மைல். இது சமுத்திர மட்டத்தை விட 6000 அடிக்கு மேலிருக்கிறது. சில வீடுகளுமுண்டு. தபால் பெட்டியுமிருக்கிறது. கடைகளும் சத்திரங்களுமுண்டு. இவ்விடமிருந்து தான் செங்குத்தான எதிர் மலைமீதேறி கல்பேஷ்வர் நாத் என்னும் ஜடை ரூபமாயுள்ள மூன்றாவதான கேதாரீஸ்வரரின் சந்நதிக்கும் த்யான் பத்ரி என்னும் சந்நதிக்கும் செல்லவேண்டும். வெகு கடினமான பாதை. சரியான வழியே யில்லை. இந்த இரண்டு ஸ்தலங்களுக்குப் போகும் வழியில் தான் சகா சக்ரவர்த்தி தபஸ் செய்த விடமென்பதாயும், அவருடைய அறுபதினாயிரம் (60,000) புத்திரர்கள் மடிந்தவிடமென்பதாயும், பகீரதன் கங்கையைக் கொண்டு வந்து அவர்களுடைய சாம்பல்களைக் கறைத்து அவர்களை மோக்ஷத்திற்கு அனுப்பின

தாகவும் சொல்லப்படும் இடம் இதுவென்றே அவ்விடமுள்ள ஜனங்கள் ஒரு பெரிய மைதானமான விடத்தைக் காட்டுகிறார்கள். இவ்விடத்தில் உரிகம் என்று பெயருள்ள ஒரு கிராமம் உண்டு. ஊர்வ ரிஷியின் ஆஸ்ரமம். உரிகம் தாண்டிச்சென்றால் த்யான் பத்ரி என்னும் சந்நதி தரிசிக்கலாம். அவ்விடமிருந்து 2 மைல் முன் சென்றால் பார்கி (Bharki) என்னும் ஒரு கிராமமிருக்கிறது. அந்தக்கிராமத்தினின்றும் 1 மைல் தூரம் மலையின் சந்துக்குள் சென்றால் கல்பேஷ்வர் நாத் என்னும் ஈஸ்வரனின் முடி (ஜடை) மாத்திரமுள்ள கோயில் ஒரு மலையின் குகையிலிருக்கிறது. இந்தக் குகையின் பக்கத்தில் மலைமேலிருந்து பனிக்கட்டிகள் கரைந்துவிழும் ஒரு பெரிய ஜல வீழ்ச்சியிருக்கிறது. அந்த ஜலம் ஓடுகிறதைத்தாண்டியே கோயிலுக்குப் போகவேண்டும். ஜலம் வெகுவும் குளிர்ச்சி. கையால் தொட்ட மாத்திரத்தில் கையில் குளிர்ச்சியாலெறிச்சலுண்டாகும். இவ்விடத்தில் தான் ஈஸ்வரன் கங்கையைத் தன் ஜடாமுடியில் பெற்று பகீரதனுக்குக் கொடுத்தாரென்று அவ்விடமுள்ள ஜனங்கள் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள். அடியேன் அந்த ஸ்தலங்களுக்குப்போய்விட்டு தரிசினம் செய்து வரும்பொழுது வெகு கஷ்டப்பட்டு ஹிலாங்கு சட்டி சேர்ந்தேன். திரும்பி வரும் பொழுது சற்று கால் அடி தப்பினால் தலைகீழாய் நதியில் விழவேண்டும். ஆகையால் யாத்ரீகர்கள் அங்கு செல்வது உசிதமல்ல.

ஹிலாங் அல்லது குமார சட்டியிலிருந்து கனோடி சட்டி (Hilong or Kumara Chatti to Kanoti Chatti) 2½ மைல். இதற்குக்கீழ் அனிமாதா பத்ரி என்ற சந்நதி இருக்கிறது.

கனோடி சட்டியிலிருந்து ஜட்குல்ல சட்டி (Kanoti Chatti to Jadkulla Chatti) 1 மைல்.

ஜட்குல்ல சட்டியிலிருந்து சிங்தார் சட்டி (Jadkulla Chatti to Singdar Chatti) 2 மைல்.

45. சிங்தார் சட்டியிலிருந்து ஜ்யோதிர்மத அல்லது ஜோஷி மடம் (Singdar Chatti to Jyothir—Matha or Joshi Mutt) 1 மைல். இந்த ஸ்தலம் பத்ரிக்கு 19வது மைலிலிருக்கிறது. இவ்விடம் தான் ஆதி சங்கரரின் வட திசை மடமிருக்கிறது. இம்மடத்தின் அதிபதிதான் பத்ரீ நாராயணன் கோயிலில் பூஜை செய்யும் "ராவல்" என்றழைக்கப் படும் ஸ்மார்த்த மலையாள தேசத்து நம்பூதிரி பிராமணர். இம்மடத்தின் ஓர் அறையில் ஆதி சங்கரர் வைத்துக்கொண்டு பூஜை செய்துக் கொண்டிருந்த நரசிம்ம மூர்த்தி யென்னும் சாலக்கிராமம் இப்பொழுதும் பூஜையிலிருக்கிறது. யாத்ரீகர்கள் அதைப் பார்த்து தரிசனம் செய்கிறார்கள். இது பெரிய ஊர். தபால் தந்தி ஆபீசும், தர்ம வைத்தியசாலையும், கடைகளும், சத்திரங்களுமுண்டு. பனிக் காலத்தில் பத்ரீ நாராயணன் கோயில் மூடின பின்பு திறக்கும் வரையிலும் ராவல் என்னும் பூஜாரி தன் சிப்பந்திகள் சகிதமாய் இவ்விடத்திலிருக்கும் சங்கர மடத்தில் வசிக்கிறார். மற்றைய கிராமத்தார்களும் இவ்விடமே வந்து விடுகிறார்கள். இவ்விடமிருந்து வட கிழக்காயுள்ள மானசரோவரம் அல்லது கைலாஸ் என் னுமிடத்திற்கு நிதிபாஸ் (Nitipass) மூலியமாய் 20—30 நாட் கள் பிரயாணம் செய்ய வேண்டும். கையில் சாப்பாட்டு சாமான்களும் கம்பளி உடுப்புகளும் கொண்டு போவதுடன் ஒருவராய்ப் பிரயாணம் செய்யக்கூடாது. 8—10 ஜனங்கள் கூட்டத்துடன் கையில் துப்பாக்கியுடன் சென்றால்த் தான் பயமின்றி சேரலாம். மற்றும் 8 மைல் தூரத்தில் வட

கிழக்கே தபோவன மென்கிற பாவிஷ்ய பத்ரி என்னும் ஸ்தலத்திற்குப் போக இவ்விடமிருந்தே வழி பிரிகிறது.

46. ஜோஷிமடத்திலிருந்து விஷ்ணுபிராயாக் (Joshi mut to Vishnuprayag) 2 மைல். இந்த 2 மைலும் இறக்கமான பாதை. இவ்விடம் அலக்நந்தா என்னும் கங்கையில் விஷ்ணுகங்கை யென்னும் நதி சங்கமமாகிறது. இறங்கி ஸ்நானம் செய்ய படிக்கட்டுகளிருக்கின்றன.

விஷ்ணு பிராயாகிலிருந்து பல்தோத சட்டி (Vishnuprayag to Baldoda Chatti) ¾ மைல்.

47. பல்தோத சட்டியிலிருந்து காட் சட்டி (Baldoda Chatti to Ghat Chatti) 2½ மைல். சுமாரான வழி.

48. காட் சட்டியிலிருந்து பாண்டுகேஷ்வர் (Ghat Chatti to Pandukeshwar) 2½ மைல். இவ்விடம் வீடுகளுண்டு. கங்கையிலிறங்கி ஸ்நானம் செய்யலாம். கடைகளும், சத்திரங்களுமுண்டு. யோக பத்ரி சந்நதியிருக்கிறது. ஒரு முசாபரி பங்களாவுமிருக்கிறது.

பாண்டு கேஷ்வரிலிருந்து விஞயக சட்டி (Pandukeshwar to Vinaik Chatti) 2 மைல். சுமாரான வழி.

49. விஞயக சட்டியிலிருந்து லம்பாகர்ஹ (Vinaik Chatti to Lambagarha) 1 மைல். சமமான வழி. இவ்விடம் தங்க இரண்டே கட்டிடங்களுண்டு. கடையுமிருக்கிறது.

50. லம்பாகர்ஹவிலிருந்து ஹனுமான் சட்டி (Lambagarha to Hanuman Chatti) 3¾ மைல். இவ்விடமிருந்து பத்ரீ நாராயணன் 4¾ மைல் தூரம். இதுவே தான் கடைசி

சட்டி. முன்னுக்கு சட்டிகள் கிடையாது. வழி முழுதும் ஏற்றம் தான். இறக்கமே கிடையாது. வழியும் சரியானபடியிருக் காது. சில சில விடங்களில் மலைகள் கற்பாறைகளாயிராமை யால் மலையின் மண் சறிந்து வழியை மூடி விடுகின்றன (Land Slips). ஆகையால் வழியை விசாரித்து முன்னுக்குப் போகவேண்டும். சித்திரை, வைகாசி மாத காலங்களில் தான் இவ்விடம் பசுவின் பால் கிடைக்கும். பத்ரியில் இம்மாதங் களுக்கு முன் பால் கிடைக்காது. ஆகையால் பால் தேவை யானவர்கள் கண்டிப்பாய் டின் பால் கொண்டு போக வேண்டும். வைகாசியில் நிலத்திலுள்ள பனிக் கட்டிகள் கறைந்து போய் புல் முளையும்போது அவ்வூரார் எருமை பசுக் களை பத்ரிக்குக் கொண்டு வந்து பால் கறக்கிறார்கள். அப் பொழுது பால் கிடைக்கும்.

51. ஹனுமான் சட்டியிலிருந்து (பூரி பத்ரிநாத் அல்லது பிஷால் பத்ரி அல்லது பத்ரீ நாராயணன் (Hanuman Chatti to Puri Badrinath) 4¾ மைல். இதுவே யாத்ரீகர்கள் சேரவேண்டிய இடம்.

யாத்ரீகர்கள் முதலில் ஹரித்துவாரத்திலிருந்து புறப் படும் பொழுது கீழ் கண்ட சாமான்களைக் கொண்டு போவது அநுகூலம். கம்பளி உடுப்புகள், ஹரிகேன் லாந்தர் (Huricane lantern), கை பேட்டரி (torch), படுப்ப தற்கு இரண்டு கம்பளிகள்—ரப்பர் தலையணை வாங்கிக் கொண்டால் உத்தமம். கண்டிப்பாய் கால் மேஜோடும் ரப்பர் பூட்சும் (Rubber Soled Canvas Shoes) போட்டுக்கொள்ள வேண்டும். பாரமான தோல் பூட்சுகள் போட்டுக்கொண் டால் காலில் கொப்பளங்களுண்டாகும். இரண்டு ஜதை

ரப்பர் கேன்வஸ் ஷூக்கள் தேவை. செருப்பு போட்டுக் கொண்டால் கஷ்டம். பாதை முழுதும் சில சில விடங்களில் வெகு சிறிய கற்கள் இருக்கின்றன. இவையெல்லாம் சில சமயங்களில் செருப்புக்குள் சென்றால் குத்தும். செருப்பில்லாமல் நடந்தாலும் கற்களில் நடப்பது கஷ்டம். எல்லாம் மலைப்பாதை. கண்டிப்பாய் ஆண் பெண் காலில் மேஜோடும் ரப்பர் பூட்சும் போட்டுக் கொள்ளவேண்டும். கம்பளி மேஜோடு தேவையில்லை. கையில் ஏதாகிலும் மருந்துகள் எடுத்துச் சென்றாலும் நலம். மலை ஏறுவதற்கு கையில் கெட்டியான பிரம்போ அல்லது பாரமில்லாத தடியோ சுமார் 4—5 அடி நீளத்திற்குக் குறையாமலிருக்க வேண்டும்.

மலைமேல் நடக்கும்பொழுது உண்டாகும் வியாதிகளாவன.—

வயிற்றுக்கடுப்பு, ரக்தக்கடுப்பு, காலரா, அஜீரண வயிற்றுப் போக்கு, வயிற்று நோய் முதலான நோய்கள். ஆகையால் இந்த வியாதிகளுக்கு வேண்டிய மருந்துகள் எடுத்துச் சென்றால் உத்தமம். மேலும் காலில் அடிபடும் பொழுது டிங்சர் அயோடின் (Tincture Iodin—Tincture Braganzo) என்னும் மருந்துகள் கையில் அவசியமாய் பஞ்சுடன் (lint-cotton) வைத்துக்கொண்டிருக்கவேண்டியது. நடந்து செல்வதினால் சில சமயங்களில் முன்னுக்குப்போகும் பிராயணத்தில் கால் நோய் உண்டாகும் பொழுது உபயோகப்படுத்த டர்பண்டைன் (Turpentine), யூகலிப்டஸ்ஆயில் (Eucalyptus oil) போன்ற தைலங்களை வைத்துக்கொண்டிருக்கவேண்டியது. அதிகமாய் படுக்கை, துணி மணி சாமான்கள் எடுத்துச் சென்றால் கூலியாட்கள் தேவை—மற்றும் ஒரு சிறு பிரைமஸ் ஸ்டவ், குக்கர் முதலானதுவைகள் எடுத்துச் சென்றால் உத்தமம். காபி, டீ குடிக்கும் வழக்கமுள்ளவர்கள் டின் பால் கொண்டு போக

வேண்டும். (Optimus) ஆப்டிமஸ் என்னும் சிறிய ஸ்டவ் எடுத்துச் சென்றாலும் நலம். ஆனால் வழியில் கடைகளில் பால் அதிகமாய்க் கிடைக்கும். தென்னாட்டைப்போல் அந்நாட்டார் பாலில் ஜலம் கலக்கமாட்டார்கள். அப்படிக் கலந்தால் பாப மென்றும் ஜலங்கலந்த பாலை யாத்ரீகர்களுக்குக் கொடுத்தால் மஹா பாபமென்றும் பயப்படுகிறார்கள். வழியில் உருளைக்கிழங் கைவிட வேறே காய் கறிகள் கிடையாது. ஆனால் பிரயாணத் தின் மத்திய பாகத்தில் எவ்விடம் பார்த்தாலும் முளைக்கீரையும், பொதினாக் கீரையும் தானாய் எங்கும் முளைந்திருக்கும். பிர யாணிகர்கள் சாதாரணமாய் அரிசிச்சாதம், ரொட்டி, பருப்பு முதலானதுவைகளைச்சாப்பாட்டிற்கு உபயோகப்படுத்தவேண் டும். அஜீர்ணமுண்டாகும் பதார்த்தங்களை உபயோகப்படுத்தக் கூடாது. காரம், உப்பு, சீமை எண்ணெய் பதார்த்தங்கள் கடை களில் கிடைக்கின்றன. புளிப்பு வேண்டியவர்கள் புளிப்பழம் தங்களுடனே கொண்டு போகவேண்டும். ஆனால் புளி, உப்பு, காரம் இவைகளைப் பிரயாணம் செய்யும் பொழுது குறைப்பது நலம். காபி, டீ இவைகளைவிட வழியில் நல்ல பாலைச் சாப்பிடு வது உத்தமம். 1 அணவுக்கு பால் சாப்பிட்டால் வயிறு நிறைந்துவிடும். ஹரித்துவாரத்திலிருந்து மலை மேல் போய்த் திரும்புவதற்கு சுமார் ரூ. 10 கையிலிருந்தால் போதும். தின மும் சாப்பாட்டிற்கு 0—1—0, 0—1—6 அணவிருந்தால் ஆள் ஒன்றுக்குப் போதும். பிரயாண காலத்தில் விடியற் காலங்களில் இருட்டு மாறி, கீழ் வெளுப்புண்டாகும் பொழுது புறப்பட்டால் வெகு சுகம். காலை 7—8-மணி வரையிலும் நடந்த பின்பு ஜல மலபாதை செய்துக் கொண்டு பல் துலக் கினதும் யாதாகிலும் ஒரு சட்டியில் சூடான பால் விற்கு மிடத்தில் 0—0—9 அல்லது 0—1—0 அணு பால் குடித்து

விட்டு 10—12 மணி வரையிலும் சுலபமாய் நடக்கலாம். வெய்யல் ஜாஸ்தியானதும் ஒரு சட்டியிலிறங்கி ஸ்நானம் சமையல் செய்து சாப்பிட்டு விட்டு பகல் 2 அல்லது 3 மணி சமயத்திற்கு வெய்யல் தாழ்ந்ததும் புறப்பட்டால் ராத்திரி கண் இருட்டாகும் வரையிலும் நடந்து சென்று ஒரு சட்டியில் படுத்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாய் இராச்சாப்பாடு கூடாது. வெகுவாய் யாரும் செய்து கொள்ளுகிறதில்லை. இராச்சாப்பாட்டினால் அஜீர்ண வியாதிகளுண்டாகிறதென்பர். சட்டிகளில் இறங்கினால் குழாய்த் தண்ணீரையே உபயோகிக்க வேண்டும். ஆற்று ஜலத்தை உபயோகிப்பது உசிதமல்ல. (அடியேன் இம்மாதிரி செய்ததினால் காலை சாப்பாட்டிற்கு முன் 10 மைலும் மாலையில் 10 மைலுக்குக்குறையாமலும் தினமும் 20-22 மைல் பிரகாரம் நடந்து மத்தியில் மழையால் 1 நாள் தடைபட்டு ஹரித்வாரம்விட்ட 9ம் நாள் பத்ரி சேர்ந்தேன்).சிலர் காலையிலெழுந்து ஸ்நானம் சாப்பாடு செய்து புறப்பட்டால் அதிக தூரம் நடக்கமாட்டார்கள். வெய்யல் வந்துவிடும். மற்றும் சட்டிகளில் ஈக்களின் உபத்திரவம் ஜாஸ்தி. முகம் வாய் திரேக மெல்லாம் ஈக்கள் மொய்த்துக் கொள்ளும். இவைகளைத் தின்பதார்த்தங்களில் உட்காராதபடி தடுப்பதே நலம். காலரா வருவதைத் தடுக்கலாம். வழியில் பால்கோவா மிட்டாய்கள் வெகுவாய்க் கிடைக்கும். சாப்பிட்டு வழக்கமில்லாதவர்கள் இவைகளைத் தின்பதினால் அஜீர்ணத்திற்கிடம் கொடுப்பார்கள்.

வழிகளிலுள்ள முசாபரி பங்களாக்களில் தங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. வேண்டுமானவர்கள். U. P. Garhwal Dist. P. W. D. Engineer, Pauri—கார்வால் ஜில்லா, பப்ளிக் வர்க்ஸ் டிபார்ட்மென்டின் இஞ்சினீரவர்களுக்கு

முன்னடியே எழுதி அனுமதி பெறவேண்டும். இவர் பௌரி என்னுமூரில் வசிக்கிறார். வழியில் கடைக்காரர்கள் தயாரித்திருக்கும் குடிசைகள், கொட்டடிகளே சுத்தமாயும் அநுகூலமாயுமிருக்கும். பத்ரீ நாராயணன் கதவைத்திறக்கும் பொழுது முதல் முதல் செல்லும் யாத்ரீகர்களுக்கு வழியில் சௌகரியமதிகம். ஏனென்றால் யாத்திரைக்குப்போகிறவர்களேயொழிய திரும்பி வருபவர்களின் கூட்டமிராது. மத்திய யாத்திரை காலங்களில் சட்டிகளில் வரும்போகும் யாத்ரீகர்கள் கூட்டமதிகம். தங்கப் படுக்க இடமும் கஷ்டமாகும். அச்சமயங்களில் வழியின் சத்திரங்களும் அசுத்தமாயிருக்கும்.

தென் தேசத்து யாத்ரீகர் பத்ரீ யாத்திரை செய்யும் பொழுது ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி பாஷை தெரிந்த ஒருவரை தங்கள் ஜதையில் கண்டிப்பாய்க் கூட்டிச் சென்றால் தங்களுக்கு பாஷையின் கஷ்டம் ஒன்றும் தெரியாமல் சுகமாய் வேண்டிய அநுகூலங்கள் செய்துகொண்டு போக வர பிரயாணம் செய்யலாம். ஏனென்றால் வட நாட்டாருக்கு ஹிந்தி பாஷையைவிட வேறொன்றும் தெரியாது. இங்கிலீஷ் பழக்கமும் மலைமேலுள்ளவர்களுக்குக் கிடையாது. ஆகையால் யாத்ரீகர்கள் முக்கியமாய் ஹிந்தி பாஷை தெரிந்த ஒருவரை தங்கள் ஜதையில் கூட்டிக்கொண்டோ அல்லது வழியில் சிநேகிதம் பிடித்தோ செல்லவேண்டும்.

சித்திரை வைகாசி மாதங்களில் முதல் யாத்திரை செய்பவர்கள் பத்ரியில் குளிர் அதிகமானதால் அதிகமான கம்பளிகள் மற்றும் கம்பளிச் சட்டைகள், எடுத்துச் செல்ல வேண்டும். கம்பளிக் கால் சிராய்கள் மற்றும் கோட் போட்டுக் கொண்டால் வெகு சௌகரியம், சந்நிதிக்குள்ளும் சட்டை

சிராய் போட்டுக்கொண்டும், காலுக்கு மேஜோடு போட்டுக் கொண்டே போகலாம்.

இந்தியாவிலுள்ள எல்லா வழிகளைவிட இந்த பத்ரி வழியே மிகவும் சிலாக்கியமானது. வழியின் கஷ்டமாகிலும் தாக விடையாகிலும் தெரியாது. வேண்டுமிடங்களில் தங்கி விடலாம். நிதானமாய் யாத்திரை செய்யலாம். குடும்பத்துடன் யாத்திரை செய்தால் வெகு ஆனந்தமாய் யாத்திரை செய்ய லாம். ஒவ்வொரு தங்குமிடமும் "பிக்னிக்" (picnic) என்று சொல்லும்படியான வன போஜனத்தின் சந்தோஷகாமாய்த் தோன்றும். "மலையின் பேரில் பிரயாணம் செய்யும் பொழுது பிச்சைக்காரன், ஏழை, பணக்காரனென்ற வித்தியாசமேகிடை யாது. மற்றும் வழியின் கஷ்டத்தால் அம்மாதிரி பாராட்டவு முடியாது—எல்லா ஆத்ம கோடிகளும் ஒன்றே என்ற மனோபாவம் உண்டாய் விடுகிறது. <u>இதுவே மலையின் கீழில் லாத பத்ரி யாத்திரையின் மகத்துவம். எல்லாப் பிரயாணிகர் களின் மனதும் ஒரேவிதமாய்பகவத்யானத்திலேயேயிருக்கும்."</u>

கேதார்நாத் தரிசினம் செய்யச் செல்லும் பிரயாணிகர் களின் மார்க்கம்

ஹரித்துவாரத்திலிருந்து 95 மைல் தூரமுள்ள ருத்ர பிரயாகினின்றும் மந்தாக்கினி கங்கைக் கரையின் மீது வட புறமாய் 54 மைல் சென்று விடுகிறார்கள்.

வழியின் விவரம்—

ருத்ரபிரயாகிலிருந்து சடோலி (Rudraprayag to Chatoli) 5 மைல். சமமான வழி.

சடோலியிலிருந்து ராம்பூர் (Chatoli to Rampur) 2 மைல்.

ராம்பூரிலிருந்து அகஸ்தமுனி (Rampur to Agasthamuni) 4½ மைல்.

அகஸ்தமுனியிலிருந்து சர்ஹி (Agasthamuni to Saurhi) 2 மைல். *சமமான வழி.*

சர்ஹியிலிருந்து சந்திரபுரி (Saurhi to Chandrapuri) 2 மைல். *சமமான வழி.*

சந்திரபுரியிலிருந்து பிரி (Chandrapuri to Bhiri) 2½ மைல். *முன்னுக்கு வழி கொஞ்சம் ஏற்றம்.*

பிரியிலிருந்து குண்ட் சட்டி (Bhiri to Kund Chatti) 3½ மைல். *முன்னுக்கு வழி சிறிது ஏற்றம்.*

குண்ட் சட்டியிலிருந்து குப்த காசி (Kund Chatti to Gupta Kashi) 2½ மைல். *இவ்விடம் அனேக மருந்து மூலிகைகள் கிடைக்கின்றன.*

குப்த காசியிலிருந்து நல சட்டி (Gupta Kashi to Nala Chatti) 1½ மைல். *இவ்விடமிருந்து* உக்கி மடம் *மூலியமாய்* பத்ரீ நாராயணன் *போக வழி பிரிகிறது.*

நளசட்டிலிருந்து நாராயன் கோடி (Nala Chatti to Narain Koti) 2 மைல். *பிரயாணிகர்களிடத்தில் அதிகமாய்ச் சாமான்களிருந்தால் அவசியமில்லாத சாமான்களை மூட்டையாய் கட்டித் தங்கள் சீல் போட்டு இவ்விடமுள்ள சௌதரி என்று வழக்கப்படுகிற கிராமதிகாரியினிடம் ஒப்புவித்துப் போனால் கேதார் தரிசனம் செய்து திரும்பும்பொழுது மூட்டையை பெற்றுக்கொள்ளலாம். அவர் பணச்சிலவில்லாமல் பாது கார்பார். சாமான்களுக்கு ரசீதும் கொடுப்பார்.*

நாராயன் கோடியிலிருந்து மெய்கண்ட (Narain Koti to Maikhanda) 3½ மைல்.

மெய்கண்டாவிலிருந்து பட (Maikhanda to Phata) 2 மைல்.

படவிலிருந்து ராம்பூர் (Phata to Rampur) 3 மைல். இவ்விடமிருந்து 1½ மைல் சமமான வழி. முன்னுக்கு 3 மைல் தூரம் திரிஜுகி நாராயன் போகும் வரையிலும் ஏற்றம். தண்ணீர்க் கஷ்டம். தேவப் பிரயாகிலிருந்து கங்கோத்ரி போன பிரயாணிகள் இவ்விடம் திருப்பி வந்து சேருகிறார்கள். இவ்விடம் உஷ்ண ஜல தாரைகள் உண்டு.

ராப்பூரிலிருந்து திரிஜுகி நாராயன் (Rampur to Trijugi Narain) 4½ மைல். 1½மைல் சமமான வழி. 3 மைல் ஏற்றம். தண்ணீர்க் கஷ்டம்.

திரிஜுகி நாராயனிலிருந்து கௌரிகுண்ட் (Trijugi Narain to Gauri Kund) 6½ மைல். இவ்விடமிருந்து 3½ மைல் தூரமுள்ள சோமத்வார என்னும் சட்டிவரையிலும் இறக்கம், பின்னிட்டு 3 மைல் குண்டம் வரையிலும் ஏற்றம். இவ்விடம் ஓர் உஷ்ண ஜல தாரையுண்டு.

கௌரிகுண்டிலிருந்து ரம்பர்ஹ (Gauri Kund to Rambarha) 4 மைல். இது தான் கடைசி சட்டி. (தங்குமிடம்). இவ்விடமிருந்து கேதார்நாத் 3 மைல் தூரம். அவ்விடம் குளிர் ஜாஸ்தியாயிருப்பதினால் சில யாத்ரீகர்கள் தரிசினம் செய்துக் கொண்டு மருபடியும் இந்த சட்டிக்கே ராத்திரியில் வந்து தங்கிவிடுகிறார்கள்.

ரம்பர்ஹவிலிருந்து கேதார்நாத் (Rambarha to Puri) Kedarnath) 3 மைல். இந்தவிடம் சமுத்திரமட்டத்தை விட 11,500 அடி உயரமிருக்கிறது. இவ்விடம் சிவலிங்க மொன்றுளது. இதுவே தரிசினுர்த்தம் செல்லுமிடம்.

பத்ம புராணத்தில் சோல்லி யிருக்கும்படியான பஞ்ச (ஐந்து) கேதார் எனப்படுபவைகளின் விவரம்.—

1. கேதார்நாத் என்னும் இவ்விடத்தில் பீமனுடைய பயத்தினுல் எருமைக்கடாவின் உருவங்கொண்ட சிவனின் பின் பாகமாகிய புட்டமிருக்கிறது.

2. மத்ய மஹேஸ்வா என்னுமிடத்தில் சிவனுடைய நாபிக்கமலம் அல்லது மத்திய பாகமிருக்கிறது. இது உகீகி மடத்திலிருந்து கடினமான கால் பாதையில் 18 மைல் செல்ல வேண்டியது.

3. துங்கநாத் என்னுமிடத்தில் சிவனுடைய கைகள்—ஹஸ்தங்கவிருக்கின்றன. 46ம் பக்கம் கண்டிருக்கும் சோப்ட என்னுமிடத்திலிருந்து 3 மைல் தூரம். கடினமான வழி. இது சமுத்திர மட்டத்தைவிட 12,000 அடி உயரம்.

4. ருத்ரநாத் என்னுமிடத்தில் சிவனுடைய முகமிருக்கிறது. 47ம் பக்கம் கண்டிருக்கும் மண்டல் என்னும் ஸ்தலத்திலிருந்து ஒரு கால் பாதையில் 15 மைல் சென்ருல் இத்தலத்தை யடையலாம்.

5. கல்பேஷ்வர்நாத் என்னுமிடத்தில் சிவனுடைய ஜடையிருக்கிறது. இந்த இடத்திற்கு ஜோஷிமடம் அடையுமுன்னுள்ள 33ம் பக்கம் 44 பாராவில் கண்டிருக்கும் ஹிலாங்கு அல்லது துமாா சட்டியிலிருந்து

6 மைல் செல்லவேண்டும். 1 மைல் இறக்கமும் 5 மைல் கடினமான ஏற்றமுள்ள வழி.

கேதார்நாத் தரிசினம் செய்தபின் சென்ற வழியே திரும்பி வந்து நாராயன் கோடியில் மூட்டையை எடுத்துக்கொண்டு 23 மைல் தூரத்திலுள்ள நளசட்டி வரையிலும் வந்து அவ்விடமிருந்து உக்கிமடம் போகும்வழியாய் 3 மைல் சென்றால் உக்கிமடம் வருகிறது. இது கேதார்நாத் கோயிலில் பூஜை செய்யும் ராவல் என்பவரின் வாசஸ்தானம். இவ்விடமிருந்து 18 மைல் கடினமானகால் வழியில் சென்றால் இரண்டாவது கேதார் எனப்படும் மத்ய மஹேஸ்வர என்னும் ஸ்தலத்திற்குச் செல்லலாம்.

நள சட்டியிலிருந்து உக்கிமடம் (Nala Chatti to Ukhi Matha) 3 மைல்.

உக்கிமடத்திலிருந்து கணேச சட்டி (Ukhi Matha to Ganesh Chatti) 3½ மைல்.

கணேச சட்டியிலிருந்து போதி பச (Ganesh Chatti to Pothi Basa) 5 மைல். வழி ஏற்றமாயிருக்கிறது.

போதி பசவிலிருந்து சோப்ட (Pothi Basa to Chopta) 3 மைல். இவ்விடமிருந்து ஒரு பாதை 3-வது கேதாராகிய துங்கனத் என்னும் ஸ்தலத்திற்குப் போகிறது. துங்கனத் என்னுமிடம் சமுத்திர மட்டத்தைவிட 12,000 அடி உயரமிருக்கிறது. கடின ஏற்றமான பாதை.

சோப்டவிலிருந்து பங்கர் பச (Chopta to Pangar Basa) 4 மைல்.

பங்கர் பசவிலிருந்து மண்டல் (Pangar Basa to Mandal) 4 மைல். இவ்விடமிருந்து 15 மைல் தூரமுள்ள ஒரு கால் பாதை 4-வது கேதாரென்கிற ருத்ரநாத் என்னும் ஸ்தலத்திற்குப் பிரிகிறது.

மண்டல் என்னுமிடத்திலிருந்து கோபீஷ்வர் (Mandal to Gopeshwar) 4½ மைல். இந்த வழி அடர்த்தியான காடுகளின் மார்க்கத்தில் இறக்கமாகவும் ரமணீயகரமாயுமுள்ளது.

கோபீஷ்வரிலிருந்து சமோலி (Gopeshwar to Chamoli) 3 மைல். இவ்விடம் ஹரித்துவாரத்திலிருந்து கர்ணபிரயாக் மார்க்கமாய்—பத்ரி செல்லும் வழி கிடைக்கிறது.

சமோலியிலிருந்து(Chamoli) பத்ரீ நாராயணன் போகும் வழியின் விவரம் 31வது பக்கம் 37வது பாராவில் பார்க்கவும். இவ்விடமிருந்து பத்ரி 48 மைல்.

பத்ரீ நாராயணனிலிருந்து திரும்பிவரும் மார்க்கம்.

திரும்பும்போது சென்ற வழியான ரிஷிகேஸ் மார்க்கம் திரும்பினல் ரிஷிகேஸ் (ரிஷிகேஸ்) 169 மைல் தூரம்.

67½ மைல் தூரமுள்ள கர்ணபிரயாக் வரையிலும் பத்ரியிலிருந்து திரும்பி ராம்நகர் மார்க்கம் இறங்கினல் ராம்நகர் 164 மைல்.

ராம்நகர் மார்க்கத்தில் இறங்கும் வழியின் விவரம் கீழ்கண்டவாறு.

பத்ரியிலிருந்து கர்ணபிரயாக் (Badrinath to Karnaprayag) 67½ மைல்.

கர்ணபிரயாகிலிருந்து பட்லி (Karnaprayag to Patli) 2 மைல்.

பட்லியிலிருந்து சிமலி (Patli to Simali) 1¾ மைல். *சமமான வழி.*

சிமலியிலிருந்து சிசராலி (Simali to Sisarauli) 2¼ மைல். *வழி கொஞ்சம் ஏற்றம்.*

சிசராலியிலிருந்து படோலி (Sisarauli to Bhatoli) 1½ மைல்.

படோலியிலிருந்து அதிபத்ரி (Bhatoli to Ad-Badri) 4 மைல். இவ்விடம் பத்ரீ நாராயணனெனும் பெயருள்ள சிறு கோயில்களும், தபால் தந்தி ஆபீசும், கடைகளும், தர்ம சாலைகளுமுண்டு. *சிறிய கிராமம்.*

அதிபத்ரியிலிருந்து கேடி (Ad-Badri to Kheti) 3¼ மைல். *வழி ஏற்றமானது.*

கேடியிலிருந்து ஜங்கல் சட்டி (Kheti to Jangal Chatti) 1½ மைல். *ஏற்றமான வழி.*

ஜங்கல் சட்டியிலிருந்து கண்ட பஞ்ச (Jangal Chatti to Ganda Banja) 2 மைல். *இறக்கமான வழி.*

கண்ட பஞ்சவிலிருந்து கலிமடி (Ganda Banja to Kali Mati) 1¼ மைல். *இறக்கமான வழி.*

கலி மடியிலிருந்து ரசிய (Kali Mati to Rasia) 1 மைல். *இறக்கமான வழி.*

ரசியவிலிருந்து துவர்கதோர (Rasia to Gwarhgadhera) 2 மைல். இறக்கமான வழி.

துவர்கதோராவிலிருந்து துனர் காட் (Gwarhgadhera to Dhunarghat) 1¼ மைல். இறக்கமான வழி.

துனர்காட்லிருந்து தரிம்தலி (Dhunarghat to Darhim Dali) 1½ மைல். சமமான வழி.

தரிம்தலியிலிருந்து சய்ன்ஜி (Darhim Dali to Sainji) ¼ மைல்.

சய்ன்ஜியிலிருந்து மேல்சௌரி (Sainji to Melchauri) 3 மைல். இவ்விடம் கூலியாட்களை மாற்றவேண்டும். முனி கிரேடியில் ஏற்படுத்தப்பட்ட டோலி அல்லது சுமை கூலி யாட்கள் ரிஷிகேஸுக்குத் திரும்பாவிடில் இதுரையிலும் தான் வருவார்கள். இவ்விடமிருந்து புதிய கூலியாட்கள் கிடைப் பார்கள். இவ்விடமிருந்து ஏற்படும் கூலியாட்கள் தங்கள் மனதுக்கு தோன்றினுப்போல் கூலி கேட்பார்கள். ஒரே ரேட் கிடையாது. சந்தர்ப்பம் போலும் யாத்ரீகர்கள் திரும்பிவரும் கூட்டம் போலும் கூலி கேட்பார்கள்.—முதலில் முனிகிரேடி யில் கூலி, டோலிகள் அமைக்கும் பொழுது இந்த மேல்சௌரி வரையிலும் தான் கூலி பேசுவார்கள் அல்லது ரிஷிகேஸ் வரை யிலும் ஒப்பிக்கொள்ளுவார்கள்—ஆனுல் இவ்விடலிருந்து ஒரு டோலிக்கு ராம்நகர் போக 10—15 ரூபாய் கேட்பார்கள்.

மேல்சௌரியிலிருந்து ராம்நகர் ரயில்வே ஸ்டேஷன் சேர கீழ்க்கண்ட சட்டிகள் மூலியமாய்ப் போகவேண்டும்.

சேமல்கேட் (Semalkhet) 2½ மைல்.

பிஜ்ராணி (Bijrani) 2 மைல்.

ராம்பூர் (Rampur) 1 மைல்.

பிரிகேஷ்வர் (Brikheshwar) 1 மைல்.

டிகோடி (Digoti) 1 மைல்.

கானயீன் (Ganayeen) 2 மைல். இது பெரிய ஊர். தபால் தந்தி ஆபீசும், தர்மசாலைகள், கடைகளுண்டு. இவ்விடமிருந்து ஒரு பாதை ராம்நகர் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் மற்றொரு பாதை காத்கூடம் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு ராணிகேட் மூலியமாய்ப் பிரிகின்றது. ஆனால் ராணிகேட் (Ranikhet) என்பது மிலிடெரி கண்டோன்மென்ட் நகாமானதால் யாத்திரைவாசிகளை அவ்விடம் போக விட்டால் பிளேக் காலரா முதலான தொத்து வியாதிகள் உண்டாகுமென்று கவர்ன்மெண்டார் பத்ரியிலிருந்து திரும்பி வரும் யாத்ரீகர்களை ராம்நகர் மார்க்கமே போகும்படி திருப்பி விடுகிறார்கள். ராணிகேட் மார்க்கம் சென்றாலும் வற்புறுத்தி ராம்நகர் மார்க்கம் திருப்பிவிடுகிறார்கள். ஆனால் சுத்தியாய் கௌரவமுள்ள யாத்ரீகர்களை அவ்வாறு தொந்திரவு கொடுப்பதில்லை. ராணிகேட் மார்க்கம் சென்றால் சீக்கிரத்தில் சேர்ந்து அவ்விடமிருந்து மோட்டார் வண்டிகளின் மீதில் காத்கூடம் என்னும் ரயில்வே ஸ்டேஷன் சீக்கிரத்தில் சேரலாம்.

கானயீனிலிருந்து (Ganayeen) ராம்நகர் போகும் மார்க்கத்தில் 2 மைலுக்கதிகப்படாத தூரங்களில் சட்டிகளுண்டு. பிரயாணிகர்கள் சௌக்கியமாய் சாப்பாட்டிற்கு கஷ்டப்படாமல் பிரயாணம் செய்யலாம். அம்மாதிரியே

ராணிகேட் (Ranikhet) போகும் வழியும். ஆனல் இந்த வழியில் யாத்ரீகர் அதிகமாய்ப் போகாததினுல் தூரம் தூரமாய் கிராமங்களுண்டு. 4லிருந்து 6 மைல் தூரங்களுக்கு ஒவ்வொரு கிராமம் கிடைக்கும்.

முக்கிய குறிப்பு

1. ஹிமயகிரி பர்வதத்திலுள்ள வடநாட்டு யாத்ரீகர்களில் அதிகமாய் பக்தி மார்க்கமாயுள்ளவர்கள் ஹரித்வாரதிலிருந்து புறப்பட்டு தீர்த்த யாத்திரைக்காக **எமுனேத்ரி** (யமுனே நதி உற்பத்தி) **கங்கோத்ரி** (கங்கை நதி உற்பத்தி) **கேதார்நாத், பத்ரிநாத்** என்னும் இந்த நான்கு ஸ்தலங்களுக்கும் சென்று வருவது வழக்கம். அப்படிப்போக வேண்டுமானல் ஏப்பிரல் மாதம் ஆரம்பம் முதல் கொண்டு ஜூலை மாதம் முடிவதற்குள் பிரயாணப்பட்டு முதலில் **எமுனேத்ரி**, பின்பு **கங்கோத்ரி** மூன்றுவதாய் **கேதார்நாத்** தரிசினம் செய்து கொண்டு கடைசியாக **பத்ரிநாத்** தரிசினம் செய்து வரமுடியும். இந்த யாத்திரை முடிய சுமார் 2 முதல் 3 மாதங்கள் செல்லும்.—போக மாத்திரம் முழுதும் 437 மைல்கள்.

2. **கேதார்நாத்** மாத்திரம் தரிசினம் செய்து கொண்டு **பத்ரீ நாராயணன்** போக இஷ்டப்படுவோர் மே மாதம் 15ம் தேதிக்கு மேல்பட்டு செப்டம்பர் மாதம் கடைசிக்குள் யாத்திரையை முடிக்கவேண்டும். இதற்கு சுமார் 1½ முதல் 2 மாதங்கள் செல்லும்.-போக மாத்திரம் முழுதும் 255 மைல்கள்.

3. நேராய் **பத்ரீ நாராயணன்** மாத்திரம் போவதாக உத்தேசமுள்ளவர்கள் மே மாதம் 15-தேதிக்கு மேல்பட்டு அக்டோபர் மாதம் 15-தேதிக்குள் யாத்திரையை முடிக்க வேண்டும். இதற்கு 1 முதல் 1½ மாதங்கள் செல்லும்.

டோலிகளிலாவது, வேகமாய் நடந்தாவது செல்லும் யாத்ரீகர்கள் சுமார் 22 நாட்களுக்குள் இந்த ஒரு யாத்திரையை மட்டும் சுலபமாய் முடிக்கலாம்.—போக மாத்திரம் முழுதும் 183 மைல்கள். இதில் திரும்பிவரும் யாத்திரைக்கு ராம்நகரம் சென்ருல் 164 மைல்கள். ரிஷிகேஸ் வந்தால் 169 மைல்கள்.

மேலே சொன்ன 1, 2, 3, பாராக்களில் கண்டிருக்கும் மைல்களில் 14 மைல் கழித்துவிட்டால் (ரிஷிகேசிலிருந்து ஹரித்துவாரத்தின் தூரம்) பாக்கியிருக்கும் தூரம் நடந்தோ டோலிகளிலோ செல்லவேண்டும்.

முனிகிரடியிலிருந்து "ஜாம்பன்" (Jampan) என்னும் டோலிகளில் போகலாம். இதை 4 கூலியாட்கள் எடுத்துச் செல்லுகிருர்கள். ரூ. 120-150 வரையில் கேதார், பத்ரி போய் வர கேட்பார்கள். இது ஒரு சிறிய குறிச்சி. உட்கார்ந்து காலை நீட்டிக்கொள்ள அநுகூலமாயிருக்கும். ஒருவராஞல் அவருடைய சொற்ப சாமான்களை அதிலேயே வைத்துக்கொள்ளலாம். பெட்டி படுக்கையிருந்தால் வேறே சுமைகூலியாளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சுமை கூலியாளுக்கு 1 மனுவு பாரமுள்ள சாமானுக்கு போகவர ரூ. 30 முதல் ரூ. 50 வரையில் கொடுக்கவேண்டும். " கண்டி " (Khandi) என்பது ஒரு பெரிய நீண்ட கூடை. இதில் ஒருவர் மாத்திரம் உட்காரலாம். இதை ஒரு கூலி தன் முதுகில் கட்டிக்கொண்டு போகிருன். போய் வர ரூ. 40 முதல் ரூ. 60 வரையில் சுமை கூலி கேட்பார்கள். பிரயாணியினுடைய வயது, உடம்பின் பெருமனைப் பார்த்து சார்ஜு கேட்பார்கள். இதில் உட்கார்ந்து செல்வது வெகு கஷ்டம். உட்கார்ந்தால் அசையமுடியாது. இதில் சகஜமாய் பலமில்லாத கிழங்கள் மாத்திரம் ஏறிப்போவார்கள்.

இதில் பால்யமாயுள்ளவர்கள் உட்காரமாட்டார்கள். இதில் உட்காருவதைவிட நடந்து செல்லுவதே உத்தமம்.

குதிரைகளும் கோவேரி கழுதைகளும் ஏறிப்போகக் கிடைக்கும். அவைகளுக்கும் சார்ஜு ரூ. 60க்குள்ளேயே போகவர கேட்பார்கள்.— இந்த ஜாம்பன்களில் கங்கோத்ரி, யமுனோத்ரி செல்ல வேண்டுமானால் பணச்சிலவு வெகுவாகும்.

மற்றும் முனிகிரேடியிலிருந்து ஏற்படுத்தப்படும் டோலி யாட்கள் அல்லது சுமை கூலிகளிடத்திலிருந்து டெஹ்ரி சர்க்காரார் வொர்க்மென்ஸ் பிரீச் ஆப் காண்ட்ராக்ட் ஆக்டின்படி (Workmen's Breach of Contract Act) இரண்டு காரார்களை ஏற்படுத்துகிறார்கள். யாத்ரீகர்களிடமிருந்து தாங்கள் கூலியாட்களுக்கு ஒப்புக்கொண்ட பணத்தை யாத்திரை தீர்மானமானவுடன் பூராகவும் கொடுப்பதாய் எழுதிக் கொண்டு அதை சர்க்காரார் வைத்துக் கொள்ளுகிறார்கள். யாத்ரீகரை சரியானபடியாய் நடு வழியில் விட்டுவிடாமல் ஒப்பந்தம் செய்த பிரகாரம் சுமந்து கொண்டு போய் ஒப்பிக் கொண்ட கடைசி இடத்தில் விட்டு விடுவதாக கூலிகள் எழுதிக்கொடுத்த ஒப்பந்தப் பத்திரத்தை யாத்ரீகர் கையில் கொடுத்து, ஒப்பந்தம் சரியான பிரகாரம் முடிந்ததாவென்னும் சமாச்சாரம் ஷை பத்திரத்தில் யாத்ரீகர்கள் எழுதிக் கூலிகள் கையில் கொடுத்தனுப்ப வேண்டும். யாத்ரீகர்களுக்கு கூலிகள் திருப்திகரமாய் நடந்ததாக மேற்கண்ட ஒப்பந்தப் பத்திரத்தில் யாத்ரீகர் எழுதியிருந்தால் டெஹ்ரி (Tehri) சர்க்காரார் இக்கூலிகளை மருபடியும் புதிய யாத்ரீகர்களை சுமக்க அனுமதிக்கிறார்கள். இல்லாவிடில் இவர்களை துரத்திவிட்டு அந்த யாத்திரை முடியும் வரையிலும் இவர்களை கூலி வேலைக்கு எடுத்துக் கொள்ளுவதில்லை.

இந்த பத்ரி யாத்திரையின் பலன். (Popular belief)

வடநாட்டார் கீழ்க்கண்டவாறு நம்புகிறர்கள்.

1. பத்ரிக்குப் போனவர்கள் திரும்பி வருவது நம்பிக்கை யில்லை.
2. திரும்பிவந்தால் விடாத காயலாவில் விழுகிருர்கள்.
3. மேலிரண்டையும் முதலிலேயே தப்பித்துக் கொண்டு ஊர் சுகமாய் வந்து சேர்ந்தால் இவர்களுக்கு சாகு மளவும் தரித்திரமில்லை.

அடியேன் அனுபவமுமிப்படியே.—உண்மை.

குறிப்பு.—கேதார்நாத் சந்நதி பத்ரி திறக்கு முன்பே திறந்து விடுவதினல் யாத்ரீகர்கள் சாதாரணமாய் கேதார் நாத் தரிசினம் செய்து பத்ரி போகிருர்கள். வெகு வாய் யாரும் பத்ரியிலிருந்து கேதார் போவதில்லை.

1. ஹரித்துவாரத்திலிருந்து தேவப்பிரயாக் மார்க்க மாய் யமுனேத்தரி போக 165 மைல்கள்.
2. ஹரித்துவாரத்திலிருந்து யமுனேத்திரி போகாமல் நேராய் கங்கோத்திரி போக 193 மைல்கள். (தேவப்பிரயாக் மார்க்கமே).
3. யமுனேத்திரியிலிருந்து கங்கோத்திரி போக 98 மைல்கள்.
4. கங்கோத்திரியிலிருந்து கேதார்நாத் போக 123 மைல்கள்.
5. கேதார்நாத்திலிருந்து பத்ரீ நாராயணன் போக 101 மைல்கள்.
6. ஹரித்துவாரத்த்திலிருந்து கேதார்நாத் மார்க்க மாய் பத்ரீ நாராயணன் போக 250 மைல்கள்.
7. ஹரித்துவாரத்த்திலிருந்து நேராய் பத்ரீ நாராய ணன் போக 183 மைல்கள்.

8. கோடத்வாரா (Kotadwara) என்னும் ரயில்வே ஸ்டேஷனிலிறங்கி பௌரி—ஸ்ரீநகர் மார்க்கமாய் பத்ரீ நாராயணன் போக 165 மைல்கள்.

யமுனோத்திரி கங்கோத்திரி போக கீழ்க்கண்ட வேறே மார்க்கங்களுமுண்டு.

1. ரிஷிகேஸிலிருந்து நரேந்திர நகரமென்னும் டெஹரி (Tehri) மார்க்கம்.

2. டேராடூன் (Dehra Dun) மார்க்கமாயுள்ள முசோரி (Mussoorie) மார்க்கம். இவ்வழி தேவப்பிரயாகின் வழியைவிட 80 மைல்கள் குறைவு. வெகுவும் சௌக்கியமான வழி.

மானசரோவரம் அல்லது கைலாஸ் என்னும் குளத்திற்கு (Lake) யாத்திரை போக

கீழ்க்கண்ட மார்க்கங்களாய்ச் செல்லலாம்.

1. அல்மோரா (via Almora) மார்க்கம். அல்மோரா வரையிலும் மோட்டார் வண்டிகளுண்டு.—சுலபமான வழி.

2. ஜோஷி மடத்திலிருந்து நிதிபாஸ் (via Nitipass) மார்க்கம்.

3. பத்ரீ நாராயணனிலிருந்து மானபாஸ் (via Manapass) மார்க்கம் (வெகுவும் கடினமான வழி).

4. கங்கோத்திரியிலிருந்து நிலங்பாஸ் (via Nelangpass) மார்க்கம். வெகுவும் தூரம். மற்றும் கடினமான பாதை.

இப்பிராயாணம் 2, 3, மாதங்களுக்குக் குறையாது. கையில் சமையல் சாமான்கள் எடுத்துக் கொண்டே செல்லவேண்டும். 10 ஜனங்களுக்குக் குறையாமல், கையில் மிருகங்களினின்றும் பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் வைத்துக்கொண்டே செல்லவேண்டும்.

பக்தியுள்ளோர்கள், விடாமுயற்சியுடையவர்கள் திடகாத்திரமுள்ளவர்கள் மாத்திரம் இந்த யாத்திரையை செய்ய பிரயத்தினம் செய்யலாம்.

பத்ரீ நாராயணனிலிருந்து திரும்பும் மார்க்கத்தின் விவரம்.

1. பத்ரீ நாராயணனிலிருந்து கர்ணபிரயாக் மார்க்கம் ரிஷிகேஸ் போக 169 மைல்கள்.

2. பத்ரீ நாராயணனிலிருந்து கர்ணபிரயாக் கானயீன் மார்க்கமாய் ராம்நகரம் ரயில்வே ஸ்டேஷன் செல்ல 164 மைல்கள்.

(ஷிரிகோட்டிலிருந்து (Shrikot) 38 மைல்கள் ராம்நகரம் வரையிலும் போக மோட்டார் வண்டிகள் கிடைக்கின்றன).

3. பத்ரீ நாராயணனிலிருந்து கானயீன் மார்க்கமாய் ராணிகேட் செல்ல 148 மைல்கள்.


(ராணிகேட்டிலிருந்து வடக்கே அல்மோராவுக்கும் தெற்கே காத்கூடம் (Kathgodam) என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் சுலப வாடகைக்கு மோடார் வண்டிகளோடுகின்றன).

[அடியேனுக்குத் தமிழ் பாஷையின் பழக்கமில்லாததால் கூடிய வரையிலும் செந்தமிழில் இக்கிரந்தத்தை எழுதமுயன்றிருக்கிறேன். குற்றங்குறைகளை மன்னிக்கவும்.]

பத்ரி யாத்திரை முற்றிற்று.

சுரேசா, பிரஸ், பெங்களூர்.

ஸ்ரீ பத்ரி யாத்திரை—மார்க்கத்தின் படம்—(வடதிசை)



தங்குமிடங்கள் அல்லது சட்டிகள்.

1. ஹரித்வாரம்
2. ரிஷிகேஸ்
3. முனிகிரேடி
4. லக்ஷமண்ஜூலா
5. கரூரசட்டி
6. குலார்சட்டி
7. நயிமோஹன்
8. பிஜனி
9. குண்ட்சட்டி
10. பண்டார்பேபல்
11. மஹாதேவ்
12. சேமல்சட்டி
13. கண்டிசட்டி
14. வியாசகாட்
15. உம்ரசு
16. தேவப்பிரயாக்
17. ராணிபாக்
18. கோல்டசட்டி
19. ராம்பூர்சட்டி
20. வில்வகேதார்
21. ஸ்ரீநகர்
22. சுக்ரட
23. பட்டிசேர
24. கண்கர
25. நர்கோட
26. குலாப்ராய்
27. ருத்திரபிரயாக்
28. சிவநந்தி
29. கமேர
30. சோடபீபல்
31. கர்ணபிரயாக்
32. ஜெய்கண்டி
33. நங்கசு
34. சோன்ல
35. நந்தபிரயாக்
36. சமோலி
37. மத
38. ஸியாஸய்ன்
39. ஹத்
40. பீபல்கோடி
41. கரூரகங்க
42. பாதாளகங்க
43. குலாப்சோடி
44. ஹிலாங்கு
45. ஜோஷிமடம்
46. விஷ்ணுபிரயாக்
47. காட்சட்டி
48. பாண்டுகேஷ்வர்
49. லம்பாகர்ஹ
50. ஹனுமான்சட்டி
51. பத்ரீநாராயணன் (பத்ரிகாஸ்ரமம் or வதரியாச்சிரமம்)

அடியேன் தயாரிக்கும்

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் சம்மந்தமாகிய

"108 திவ்ய தேச யாத்ரா ப்ரபாவ சந்திரோதயம்"

என்னும் படங்களுடன் கூடின க்ரந்தம் சீக்கிரத்தில் வெளியாகும்.

---

12 வடநாட்டுத் திவ்ய தேசங்களென்னும்

க்ரந்தமும் தயாரிக்கப்படுகிறது.

ஸ்ரீ பத்ரி யாத்ரா மார்க்கம் என்னும் இப்புத்தகம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு ரூ. 0-5-0 தபால் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. கெ. (105) பலிஜ,
வக்கீல்,
"பத்ரீ வில்லா"
பெங்களூர் சிடி.